# இலக்கு

வாராந்த மின்னிதழ்


GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 374

சனி, 17 ஜனவரி, 2026 |


பக்கங்கள் 14

www.ilakku.org

## நான்கு ஆண்டுகளில் ஜூலியின் இராஜ – தந்திரம்

விதுரன்



## கேணல் கிட்டுவினதும் அவர் தோழர்களதும் 33ஆவது நிறைவாண்டின் நினைவுகளோடு …

மாவீரர் கேணல் கிட்டு அவர்களும் அவரின் உயிர்த் தோழர்களும் இந்துமாக்கடலில் இந்திய அரசின் ஈழத்தமிழின அழிப்புச் செயற்திட்டத்தில் வீரச் சாவடைந்த 33 வது ஆண்டு 16.01.2026 நிறைவு பெற்றது. மரணத்தை வென்ற மாவீரர்களான அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் ‘ இலக்கு’ அவர்களின் தாயகக் கனவான ஈழத்தமிழர் இறைமையை மீள் நிறுவுதல் வழி ஈழத்தமிழர்க்கான பாதுகாப்புடன் கூடிய அமைதியையும் வளர்ச்சிகளையும் உறுதிப்படுத்த உழைக்க ஈழத்தமிழர் அனைவரையும் இலக்கு அழைக்கிறது.

## மலையகப் பகுதிகளில் மாணவர் இடைவிலகல் எதிர்கால கல்வியில் சவால்



மருதன் ராம்



## ட்ரம்ப் கிறீன்லாந்து பற்றி பொய் சொல்லவில்லை, அதற்கான காரணம் இங்கே

மொழியாக்கம்: ஆர்தீகன்

வேல்ஸில் இருந்து அருஸ்

## ஈரானை எப்படி வீழ்த்த முடியும்?




www.ilakku.org | info@ilakku. org | © 2026 இலக்கு இணையம்

# போர்க்குற்ற விவகாரம் - மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தல்



சர்வதேசசட்டத்தின்பிரகாரம்போர்க்குற்றங்கள்மற்றும்மனிதாபிமானத்துக்குஎதிரானகுற்றங்களில்ஈடுபட்டோரைத் தண்டிக்கவேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கிறது. அக்கடப்பாடு நிறைவேற்றப்படும் வரை பொறுப்புக்கூறலுக்கான அழுத்தத்தை மேலும் வலுவாகப் பிரயோகிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை சர்வதேச நாடுகளின் அரசாங்கங்கள் முன்னெடுக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் கீழ் இயங்கிவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டு வந்த இலங்கையில் மோதல்களின் போது இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான பொறுப்புக்கூறல் பற்றிய 'நாங்கள் அனைத்தையும் இழந்துவிட்டோம் – நீதி கிட்டும் என்ற நம்பிக்கையைக்கூட இழந்துவிட்டோம்' எனும் தலைப்பிலான 30 பக்க விரிவான அறிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை (13) வெளியிடப்பட்டது.

இலங்கையில் ஆயுதமோதலின்போதும், அதன் பின்னரும் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகள் வெறுமனே தற்செயலாக அங்கொன்றும், இங்கொன்றுமாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல எனவும், மாறாக அவை வேண்டுமென்றே பரந்துபட்ட ரீதியில் நிகழ்த்தப்பட்ட, முறையாகக் கட்டமைக்கப்பட்ட வன்முறைகளின் ஓரங்கமாகும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 12

## எந்த இடத்திலும் எந்த வடிவத்திலும், இனவாதத்திற்கு இடமில்லை

### - யாழில் ஜனாதிபதி தெரிவிப்பு



இன்றும் கூட, சிலர் தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் அல்லது மதத் தளங்களை மையமாகக் கொண்டு, ஆங்காங்கே இன மோதல்களைத் தூண்ட முயற்சித்தாலும், வடக்கு, தெற்கு, கிழக்கு அல்லது வேறு எந்த இடத்திலும் இனவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உறுதிபட தெரிவித்துள்ளார்.

மேலும், யுத்தத்தினால் இடம் பெயர்ந்த அனைத்து மக்களின் வீட்டுப் பிரச்சினையும் தனது பதவிக் காலத்தில் தீர்க்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி, மீசாலை, வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற, யுத்தத்தினால் இடம்பெயர்ந்த குடும்பங்களின் மீள் குடியேற்றத்திற்காக 2,500 வீடுகளை நிர்மாணித்தல் உட்பட நாடு முழுவதும் 31,218 குடும்பங்களுக்காக வீடுகளை நிர்மாணிக்கும் "தமெக்கென ஒரு இடம் - அழகான வாழ்க்கை' தேசிய வீட்டுத் திட்டம் 2026" அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்தத்தினால் தொடர்ச்சி: பக்கம் 13

## பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு வடக்கில் காணி வழங்க வேண்டும்:

### ஜனாதிபதியிடம் கோரிக்கை



இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு நிலமற்ற நிலையில் தவிக்கும் மலையக மக்களுக்கு, வட மாகாணத்தில் காணிகளை வழங்க முன்வந்துள்ளதாகவும், அவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்களை விரைவுபடுத்துமாறும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் மானிடம் பூமி தான இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த இயக்கத்தின் தலைவி கு.சோதிநாயகி ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

தொடர் மண்சரிவு மற்றும் இயற்கை பேரிடர்களால் வாழ்விடங்களை இழந்த மலையக மக்களுக்காக, வடக்கில் பல தன்னார்வலர்கள் தமது இயக்கம் ஊடாக காணிகளை வழங்கத் தயாராக இருப்பதாக சோதிநாயகி தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கத்தால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள 2026-ஆம் ஆண்டிற்கான பாரிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ், இவ்வாறு நிலம் பெறுபவர்களுக்கான நிதி உதவியை முன்னுரிமை அடிப்படையில் விரைவாக விடுவிக்க வேண்டும் என அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் காணிகளைப் பொறுப்பேற்பது மற்றும் தொடர்ச்சி: பக்கம் 13

# ஈரான் மீதான தாக்குதல் கடைசி நிமிடத்தில் நிறுத்தம்



ஈரான்மீதானஅமெரிக்கத்தாக்குதல்கடைசிநிமிடத்தில்நிறுத்தப்பட்டதாகக்கூறப்படுகிறது. டொனால்ட் டிரம்ப் தனிப்பட்ட முறையில் தலையிட்ட பிறகு ஈரான் மீதான அமெரிக்க இராணுவத் தாக்குதல் சில நிமிடங்களுக்கு முன்பு நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது என்று வல்லா இராணுவ ஆய்வாளர் அமீர் போபோட் தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை(15) ஈரானிய வான்வெளி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

தெளிவான, தீர்க்கமான முடிவை வழங்கும் இராணுவ நடவடிக்கையை மட்டுமே தான் அங்கீகரிப்பதாக டிரம்ப் ஆலோசகர்களிடம் கூறியுள்ளார். அதேசமயம் தான் ஈரானை தாக்க விரும்ப வில்லை என்று டிரம்ப் ஈரானுக்குத் தெரிவித்துள்ளதாகவும், பாகிஸ்தானுக்கான ஈரானின் தூதர் ரெசா அமிரி மொகதாம் தெரிவித்ததாக பாகிஸ்தான் ஊடக நிறுவனமான டான் தெரிவித்துள்ளது.

புதன்கிழமை(14) தனக்கு அந்தத் தகவல் கிடைத்ததாக ஈரானியத் தூதர் தெரிவித்தார், இது டிரம்ப் போரை விரும்பவில்லை என்பதையும், பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க

தொடர்ச்சி: பக்கம் 09

## அதிக முஸ்லீம் மாணவர்கள் - மருத்துவக் கல்லூரியை மூடிய இந்தியா



இந்திய நிர்வாகத்திற்கு உட்பட்ட காஷ்மீரில் உள்ள ஒரு மருத்துவக் கல்லூரியை மூட இந்தியா முடிவு செய்துள்ளது.மருத்துவ பாடநெறியில் ஏராளமான முஸ்லிம் மாணவர்களை சேர்ப்பது தொடர்பாக வலதுசாரி இந்து குழுக்கள் போராட்டங்களை நடத்தியிருந்தனர். அதனை காரணம் காண்பித்து இந்தியா இந்த நடைவடிக்கையை எடுத்துள்ளது.

நவம்பரில் ஐந்தாண்டு மருத்துவ இளங்கலை திட்டத்தில் சேர்ந்த 50 மாணவர்களில் 42 பேர் முஸ்லிம்கள், அவர்களில் பெரும்பாலோர் காஷ்மீரைச் சேர்ந்தவர்கள், ஏழு பேர் இந்துக்கள்.

ஒவ்வொரு ஆண்டும் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான இந்திய மாணவர்கள்

தொடர்ச்சி: பக்கம் 13

## கிறீன்லாந்தை கையகப்படுத்த 700 பில்லியன் டாலர்கள் - அமெரிக்கா



கிறீன்லாந்தை கையகப்படுத்த அமெரிக்கா 700 பில்லியன் டாலர்கள் வரை செலுத்த வேண்டியிருக்கும் என்று சாத்தியமான கையகப்படுத்துதலைத் திட்டமிடுவதில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் மற்றும் முன்னாள் அதிகாரிகளை மேற்கோள் காட்டி. புதன்கிழமை(14) NBC செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 12

## டாலரின் முக்கிய எதிரி அமெரிக்கா - நோகுவேரா




டாலரின் முக்கிய எதிரி அமெரிக்கா தான் என்று பிரபல பிரேசிலிய பொருளாதார நிபுணரும் முன்னாள் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிர்வாக இயக்குநருமான பாலோ நோகுவேரா பாடிஸ்டா ஜூனியர் தெரிவித்துள்ளார்.

டாலருக்கும் மேற்கத்திய நாடுகளால் கட்டுப்படுத்தப்படும் சர்வதேச கட்டண முறைக்கும் முக்கிய எதிரி அமெரிக்காவே. வாஷிங்டன் தனது தேசிய நாணயத்தை அதிகளவில் ஆயுதமயமாக்கி வருகிறது, இது

தொடர்ச்சி: பக்கம் 12

## ஈழத்தமிழர்களை பகடைக்காயாக கையாளும் தமிழ்நாட்டு முதலமைச்சர்கள் !

பா.அரியநேத்திரன்




ஈழத் தமிழரின் அரசியல் உரிமைக்கான போராட்டத்தில், தமிழகம் பக்க பலமாக இருக்கக் கூடியது. ஆனால் அப்படி தமிழக முதலமைச்சர்கள் செயல்பட்டார்களா என்ற கேள்வி பலருக்கும் உள்ளது.

கருணாநிதி தன்னுடைய அரசியலைச் செய்தார்,எம். ஜி.ஆர் தனது அரசியலைச் செய்தார், ஜெயலலிதா தனது அரசியலைச் செய்தார்,தற்போது கருணாநிதியின் மகன் ஸ்டாலின் தன்னுடைய அரசியலைச் செய்கிறார்.

இத்தகைய நிலையில், ஈழத் தமிழர்களுடைய விடயத்தை தமிழகத்தில் தேர்தல் காலங்களில் அரசியல் செய்வது வழமை. அது மீண்டும் அரங்கேறியுள்ளது. கடந்த மாதம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தமிழ் நாட்டு முதலமைச்சரை சந்தித்து இலங்கையில் புதிய அரசியல் யாப்பு தயாரிக்கும் செயல் இடம்பெறவுள்ளதாகவும் அதில் “ஏக்கியராச்சிய” அரசியலமைப்பு ஏற்கமுடியாது என்றும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அந்த விடயத்தை கருத்தில் எடுத்த முதலைச்சர் ஸ்டாலின் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு விரிவான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் பலவிடயங்கள் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக

* இலங்கைத் தமிழர்களுக்கான ஒரு தனித்துவமான தேசத்தை அங்கீகரித்தல்.
* வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக ஏற்றுக்கொள்தல்
* தமிழ் தேசத்திற்கான தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்துதல்.
* மலையகத் தமிழர்களுக்கான முழு குடியுரிமை உரிமைகள் உட்பட, அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தையும், பாகுபாடின்மையையும் உறுதி செய்யும் ஒரு கூட்டாட்சி ஆட்சி முறையை நிறுவுதல். இந்தக் கோட்பாடுகளை வலியுறுத்தியதாக தமிழ்நாடு முதலமைச்சர் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டி எழுதப்பட்டதாக ஊடகங்களில் காணமுடிந்தது.

கடந்த 78 வருடங்களாக தந்தை செல்வா தமிழரசுக்கட்சி மூலமாக நடத்தப்பட்ட அகிம்சை ரீதியிலான போராட்டங்கள் முதல் தலைவர் பிரபாகரன்- விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு 16, வருடங்களான தமிழ்தேசிய கட்சிகளின் அரசியல் எல்லாமே தமிழ்நாட்டு முதலமைச்சர்கள், பாரதப்பிரதமர்கள் எல்லோரிடமும் ஈழத்தமிழர்களுக்கான சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தேவை என்பதை வலியுறுத்திவந்ததை யாவரும் அறிந்தது.

ஆயுதப் போர் காலத்தில் 1986, காலப்பகுதியில் முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன் விடுதலைப்புலிகளுக்கு நிதி உதவிகளை செய்தார். என்பது அப்போது பாரிய உதவியாக இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் 2009 ஜனவரி தொடக்கம் மே, 18 வரை கோரமான போர் வன்னி நிலப்பரப்பில் இடம்பெற்ற வேளையில் முதலமைச்சராக இருந்த கருணாநிதி ஈழத் தமிழர்களின் இனப் படுகொலையை தடுத்து நிறுத்த இந்திய பிரதமருக்கு ஆக்கபூர்வமான அழுத்தம் கொடுக்கவில்லை மறைமுகமாக இலங்கை அரசுக்கு

தொடர்ச்சி: பக்கம் 13

## ஊடகர் ஜோக்கிம் இருதயானந்தன் அவர்களின் அமுதவிழா!

80 வது அகவையை அமுத விழாவாகக் காணும் பெருங்கலைஞர் ஆங்கில தமிழ் ஊடகவியலாளர் மனிதநேயச் செயற்பாட்டாளர் “உயிரோடைத் தமிழ்” சமூக ஊடக இயக்குநர்” அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஜோக்கிம் இருதயானந்தன் அவர்களுக்கு இலக்கு ஆசிரிய குழுமத்தின் வாழ்த்துகள்.

நள்ளிரவுச் சூரியன் வானலை நிகழ்ச்சி மூலம் உலகத் தமிழர்களிடையிலும் ஈழத்தமிழர் கலைத்துவ வரலாற்றிலும், காலத்தால் அழிக்க முடியாத இடத்தைப் பெற்ற இவரின் ஆங்கில தமிழ் ஊடகப்பணிகள் உண்மைக்கும் நீதிக்கும் சான்று சொல்லும் ஈழத்தமிழர் வரலாற்று ஆவணங்களாகத் திகழ்கின்றன. தலைசிறந்த வாத்திய இசைக் கலைஞராகவும் இங்கிலாந்துத் தமிழ்க் கத்தோலிக்க ஆலய பாடகர் குழாத்தின் இசையமைப்புத்துறைத் தந்தையாகவும் தமிழுக்கும் இறைவனுக்கும் இவர் ஆற்றியுள்ள பணிகள் அளப்பரியது. இங்கிலாந்தின் பொறியியல் துறையின் தலைசிறந்த பொறியியலாளரான இவர் தனது வேலைப்பளுவுக்கு மத்தியில் தொண்டுப் பணியாக எவ்வித ஊதியமும் பெறாத சேவையாளராக விளங்கினாரென்பதற்கு அப்பால் தனது மதியையும் நிதியையும் தன்னால் இயன்ற அளவுக்கு வழங்கி

இரவுத் தூக்கத்தையும் சுகத்தையும் துறந்து பணியாற்றும் தனக்கென வாழாமல் பிறர்க்குரியாளராக வாழுதல் இவரின் தனிச்சிறப்பாக உள்ளது.

## ஆசிரியர் தலையங்கம் | சனி, 17 ஜனவரி, 2026

### ஈழத்தமிழர் தாயக இறைமையை வரலாற்று மீட்பு மூலம் மீட்க காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார் உலகஇனமான ஈழத்தமிழருக்கழைப்பு

தைப்பொங்கல் திருநாள் உலகத் தலைவர்கள் பலர் வாழ்த்துரைக்க உலக விழாவாகக் கடந்த சனவரி 15ம் நாள் கொண்டாடப்பட்டது. ஈழத்தமிழர்கள் சிறிலங்கா அரசாங்கத்தால் 1983 யூலை மாதத்தில் ஏற்படுத்தப்பட்ட ஈழத்தமிழின அழிப்பால் அரசியல் புகலிடம் கோரி உலகெங்கும் பெருமளவில் புலம் பெயர்ந்து இன்று அந்நாடுகளின் குடிகளாகப் புலம்பதிந்து வாழுவதால் தைப்பொங்கலுக்கு இப்பரிணாம வளர்ச்சி ஏற்பட்டது என்பது சமகால வரலாறு. 2026ம் ஆண்டுத் தைப்பொங்கல் தினத்தன்று சிறிலங்காவால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் பிள்ளைகளுக்கான நீதிக்காக வவுனியாவில் 3251 வது நாளாக சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த ஈழத்தமிழ்த் தாய்மார்கள், தாயகத் தமிழர்களுக்கும் உலக இனமாக உள்ள ஈழத்தமிழர்களுக்கும் பின்வரும் அழைப்பினை விடுத்துள்ளதை ‘இலக்கு” கவனப்படுத்த விரும்புகிறது. அதனை புலம் பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் முழுமையாக அறிந்து செயற்பட வேண்டுமென்னும் பேரவாவில் அந்தத் தாய்மாரின் உள்ள உறுதியையும் சொல்லின் செறிவையும் உண்மையான செயற்பாட்டுக்கான அழைப்பின் வேகத்தையும் தேவையையும் அவ்வறிக்கையில் உள்ள படியே விளங்கிக்கொள்ள அவ்வறிக்கையை அப்படியே இங்கு ‘இலக்கு’ மீள்பதிவு செய்கின்றது.

“இந்த அறுவடைத் திருவிழா நமது மக்களுக்கு வலிமையையும் ஒற்றுமையையும் கண்ணியத்தையும் நம்பிக்கையையும் கொண்டு வரட்டும். மேலும் உண்மை, நீதி, மற்றும் தமிழ் வரலாறு மற்றும் நாகரிகத்தைப் பாதுகாப்பதற்கான நமது கூட்டு உறுதிப்பாட்டைப் புதுப்பிக்கட்டும். தியாகம், வலி, மற்றும் அசைக்க முடியாத உறுதிப்பாடு நிறைந்த இந்த இடத்திலிருந்து காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகள் குறித்த உண்மைக்கான எங்கள் கோரிக்கையை மட்டுமல்லாமல், தமிழ் வரலாறு, கண்ணியம், மற்றும் இறையாண்மையை மீட்டெடுப்பதற்கான ஒரு அழைப்பையும் நாங்கள் முன்வைக்கின்றோம்.

தமிழ் அறிஞர்களின் தலைமையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு சுதந்திரமான தொல்லியல் திணைக்களத்தை நிறுவ வேண்டும் என்று நாங்கள் கோருகின்றோம். இது தமிழ்ச் சைவத்தின் மற்றும் தமிழ் பௌத்தத்தின் வரலாற்று உண்மைகளைக் கண்டறிந்து வெளிக்கொணரவும், தென்னிந்திய மற்றும் வரலாற்று ரீதியாக சிலோன் என்ற ஐரோப்பியரால் அழைக்கப்பட்ட தீவு உட்பட தமிழ் நாடெங்கிலும் செழித்தோங்கிய பண்டையத் தமிழ் நாகரிகத்தை ஆவணப்படுத்தவும் வேண்டும்.

தமிழ் நாகரிகம் அண்மையில் தோன்றியதல்ல. அது தற்செயலாகவோ அல்லது குடியேற்றத்தாலோ வந்ததல்ல. அது சிங்கள மொழி, சிங்கள அடையாளம் அல்லது பிற்காலத்தில் மனிதர்களால் உருவாக்கப்பட்ட மகாவம்சக் கதைக்குப் பிறகு தோன்றியதோ அல்ல. தமிழர்கள் இங்கு நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே வாழ்ந்து வருகின்றார்கள். பலசகாப்பதங்களாக சிங்கள இனவாதக் கதைகள் தமிழர்களான எங்களைத் தங்களின் மூதாதையர்களின் நிலத்தில் குடியேறிய வந்தேறிகளென சட்டவிரோதமாக வந்தவர்களென சித்திரித்து வருகின்றன. ஒரு பொய் பலமுறை மீண்டும் மீண்டும் கூறப்படும்போது அது உண்மை போல் ஒலிக்கத் தொடங்குகிறது. இதுதான் தமிழ் மக்களான எங்களுக்குச் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பொய்யை நாங்கள் முழுமையாக நிராகரிக்கின்றோம்.

இந்த நிலம் சிங்கள இனத்திற்கு முன்பும், சிங்கள மொழிக்கு முன்பும், மகாவம்சம் எழுதப்படுவதற்கு முன்பும் ஈழத்தமிழர்களுக்குச் சொந்தமானது. இந்த வரலாற்று உண்மை தமிழ் பிள்ளைகளுக்கும், தமிழ் அரசியல் வாதிகளுக்கும், சாதாரண தமிழ் பொது மக்களுக்கும் கற்பிக்கப்பட வேண்டும். இது அனைத்துலக மக்களுக்கும் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும். ஈழத்தமிழர்கள் நமது கதையை உரக்கத் தெளிவாக மீண்டும், மீண்டும் சொல்லும் போது, சிங்களத் தலைவர்கள் தங்கள் கதையைத் தொடர்ச்சியாகவே கேட்கச் செய்ததைப் போலவே ஐரோப்பிய ஒன்றிய மற்றும் அமெரிக்க இராஜதந்திரிகளுக்கும் நமது கதையைத் தொடர்ச்சியாக எடுத்துச் சொல்லிக் கேட்கச் செய்ய வேண்டும். அப்பொழுது அவர்கள் நிச்சயம் செவிசாய்ப்பார்கள்.

நீண்டகாலப்போராட்டத்திற்கும், தாய்மார்களின் தியாகத்திற்கும் சாட்சியாக விளங்கும் இந்த இடத்திலிருந்து, காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளைப் பற்றிய உண்மையை வெளிக்கொணரவும், தமிழ் மக்கள் மீது தொடரும் அழிவைத் தடுத்து நிறுத்தவும், எங்கள் மூதாதையர்களின் தமிழர்களின் இறைமையை மீட்டெடுக்க ஆதரவளிக்கவும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் நாங்கள் மீண்டும் ஒரு முறை வேண்டுகோள் விடுக்கின்றோம்” இதுதான் அந்த எங்களின் அன்புக்கும் மதிப்புக்குமுரிய அந்த காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் தாய்மாரின் உள்ள வெளிப்பாடு செயற்பாட்டுக்கான அழைப்பு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு சுயாதீனமான தொல்லியல் ஆய்வு மையத்தினை நிறுவுதல் என்பது ஒரு எல்லை வரையிலேயே நடைமுறை சாத்தியமாகும் என்பது உலகத் தமிழர்களுக்குத் தெரியும். எனவே அவர்கள் அதுவரை பயணிக்க யாழ்ப்பாணப்பல்கலைக்கழத்துடன் இணைந்து பயணிக்க வேண்டிய பொறுப்பு உலகத் தமிழர்களுக்கு உள்ளது. அதனுடன் சேர்த்து இங்கிலாந்தில் அத்தகைய ஒரு ஆய்வு மையத்தை அமைப்பதில் அல்லது கனடாவிலோ, பிரான்சிலோ, சுவிட்சலாந்திலோ, யேர்மனியிலோ, நோர்வேயிலோ, தனியே தொல்லியலுக்கு மட்டுமல்லாது ஈழத்தமிழர் கற்கைநெறிக்கான பீடங்களை அமைக்க உலகத் தமிழர்களால் முடியும். அதனைச் செய்ய ஈழத்தமிழர்கள் முன்வரவேண்டும் என்பது இலக்கின் இவ்வார அழைப்பாக உள்ளது.

மேலும் இம்முறை யாழ்ப்பாணத்துக்கு நேரடியாகச் சிறிலங்காவின் அரசத்தலைவர் வந்து பொங்கல் விழாவில் மக்களுடன் மருதடி, வேலணை என இணைந்து கொண்டாடினார். அலரி மாளிகையில் தேசிய விழாவாகவே பொங்கல் விழாவில் சிறிலங்காவின் பிரதமர் முனைவர் ஹரிணி அமரசூரியா கலந்து சிறப்பித்தார். ஆனால் பொங்கல் விழாவிற்குச் சிறிலங்காவின் அரசத்தலைவர் வெளியிட்ட வாழ்த்தில் பொங்கல் விழாவையே இந்துக்களின் விழாவாக விளித்துத் தனது வாழ்த்தினை வழங்கியமை எவ்வாறு தமிழர் பண்பாட்டு அடையாளத்தை பொங்கல் விழாவிலிருந்து விலத்தி பொங்கலை இந்து மத அடையாளமாக மாற்றி ஈழத்தமிழினத்தின் தேசிய நீக்கத்தை முன்னெடுத்துள்ளார் என்பதை இலக்கு இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

இந்நேரத்தில் உண்மையையும் நேர்மையையும் மட்டுமே கொண்டுள்ள எங்கள் தாய்மார் எதற்காகத் தமிழர் வரலாற்று மீட்புக் குறித்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள் என்பதைப் புரிந்து கொண்டு வீணாக அரசியல்வாதிகள் செய்ததைப் பற்றியும் செய்வதைப்பற்றியும் செயல் குறித்த மதிப்புத் திறனாய்வாக இல்லாது தனிமனித வசைபாடலாக அல்லது ஒருக்கால் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லும் வாய்ப்பாட்டு முறை விமர்சனமாகப் பேசிப்பேசியே மக்களையும் திசைதிருப்பிச் செய்ய வேண்டியனவற்றைச் செய்யாது காலத்தை வீணடிக்கும் ஊடகமுறைமை மாற்றப்பட வேண்டும். இது மக்களாகிய உங்கள் கைகளில்தான் உண்டு. முறையாக நேர்மையான கண்ணியமான முறையில் ஆதாரங்களுடன் வளர்ச்சிக்கான விமர்சனங்களை முன்வைக்காது வெறுப்பரசியல் விமர்சனம் செய்பவர்கள் யாராக இருப்பினும் இலக்காக இருந்தாலும் கூட ஊடகச் சமநிலையை மக்களாகிய நீங்கள் காலந்தாழ்த்தாது உங்கள் கருத்துக்களை சம்பந்தப்பட்ட ஊடகங்களுக்கு நேரடியாகப் பண்பாக வெளிப்படுத்துவதன் மூலமே அதனை நடைமுறைச்சாத்தியமாக்க முடியுமென்பதே இலக்கின் எண்ணம்.

கனடாவில் தைமாதத்தைத் தமிழர் மரபுரிமை மாதமாக அறிவிக்கப்பட்ட பொழுது ஈழத்தமிழர்கள் தமக்கான மரபுரிமை மாதமாக யூலை மாதத்தைக் கோரியிருக்க வேண்டும். ஏனெனில் மரபு உரிமை மாதம் என்பது அமெரிக்காவில் தொடங்கப்பெற்ற பொழுது அங்கு குடிவரவு பெற்றவர்கள் ஏன் அங்கு வந்தார்கள் என்ற வரலாற்றையும் எவ்வாறு அவர்கள் அந்த நாட்டுக்குச் சமூக பொருளாதார அரசியல் ஆன்மிக வாழ்வில் பங்களிப்புக்கள் செய்கிறார்கள் என்பதையும் கூட வாழும் மக்களுக்கு வெளிப்படுத்திச் சமத்துவ சகோதரத்துவ சுதந்திர வாழ்வை குடிவரவு பெற்றவர்கள் உறுதி செய்வதற்கான அரசியல் முறைமையாகவே தொடங்கப்பெற்றது. அந்த வகையில் 1983 யூலை சிறிலங்காவின் ஈழத்தமிழின இனஅழிப்பே ஈழத்தமிழரின் உலக நாடுகளுக்கான அரசியல் புகலிட வாழ்வைத் தொடக்கியது என்பது வரலாறு. ஆகவே யூலை மாதத்தையே ஈழத்தமிழர் மரபுரிமை மாதமாக கொண்டாடுவதே அவர்களின் சமத்துவ வாழ்வுக்கு தேவையானதாகிறது. இந்தத் தவறை பிரித்தானியாவிலும் ஈழத்தமிழர்கள் தொடர்ந்து முன்னெடுத்து வருவது ஈழத்தமிழர்களின் அரசியல் அறியாமை என்றே இலக்கு கருதுகிறது.

மேலும் தமிழரசுக்கட்சியின் தலைமைகளில் ஒருவரான சட்டத்தரணி சுமந்திரன் அவர்கள் சிறிலங்கா அரசத்தலைவர் அநுர குமர திசநாயக்காவின் யாழ்ப்பாண பொங்கல் விழாக்களில் தமிழரசுக்கட்சி பங்குபற்றாது என்பதை அறிவித்த பொழுது “பிரஜா சக்தி” என்ற பெயரிலான அமைப்பின் மூலம் தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி சபைகளினை தவிர்த்து மக்களுக்கான நிவாரணப்பணிகளைச் செய்யும் சமாந்திர நிர்வாகத்தை நடாத்துவதினாலேயே விழாக்களில் கலந்து கொள்ளவில்லை என்று கூறியுள்ளார். ஆனால் சுனாமி நிவாரணப்பணிகளின் பொழுது சந்திரிகா பண்டாரநாயக்கா இவ்வாறான முறையில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து நிவாரணப்பணிகளைச் செய்வதை இதே ஜே வி பியினரே அரசியலமைப்புக்குச் சமாந்தரமான நிர்வாகத்தை அனுமதிக்கக் கூடாதென நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துத் தடுத்தனர். தாங்களும் அவ்வாறு வழக்குத் தொடுக்கப் போவதாவும் சட்டத்தரணி சுமந்திரன் கூறியுள்ளார். இது குறித்து அனைத்துலகத் தமிழர்கள் சிந்திக்க வேண்யுள்ளதையும் இலக்கு இவ்வாரத்தில் எடுத்துரைக்க விரும்புகிறது.

**ஆசிரியர்**



# நான்கு ஆண்டுகளில் ஜூலியின் இராஜ – தந்திரம்

**விதுரன்**

இலங்கை இராஜதந்திர வரலாற்றில் வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் இத்தனை ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய, அதேசமயம் கடுமையான விமர்சனங்களையும் எதிர்கொண்டு விடைபெறுவது அண்மைய தசாப்தங்களில் முதற்தருணமாகும்.

2022 பெப்ரவரி மாதம், இலங்கை பொருளாதார ரீதியாக வங்குரோத்து அடைந்திருந்த சூழலில் அரசியல் கொந்தளிப்பு ஆரம்பித்திருந்த நிலையில் தான் தனது இராஜதந்திரக்கடமைகளை ஏற்று கொழும்புக்கு வருகை தந்திருந்தார் ஜூலி சங்.



அன்று முதல் 2026 ஜனவரி 16 அன்று அவர் நாட்டைவிட்டு உத்தியோக பூர்வமாக வெளியேறும் வரையில், இலங்கையின் கோட்டாபய, ரணில், அநுர ஆகிய மூன்று மாறுபட்ட கொள்கைகளையுடைய நிறைவேற்று ஜனாதிபதிகளுடன் பணியாற்றியவராக உள்ளார்.

நான்கு ஆண்டுகள் இலங்கையில் கடமையாற்றியுள்ள அவர் வெறும் தூதுவராக மட்டுமன்றி, ஒரு அதிகாரமிக்க அரசியல் சக்தியாகவே மாறியிருந்தார் என்பது கொழும்பை உன்னிப்பாக அவதானித்த அத்தனை பேரும் மறுதலிக்க முடியாத விடயமாகும்.

கோட்டாபயவின் காலத்தில் உள்ளக நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தாலும்; ஜூலி சங்கின் வருகைக்குப் பின்னரே ‘அரகலய’ போராட்டங்கள் தீவிரமடைந்தன. ஜனநாயக ரீதியாக போராடுவதற்கான உரிமை குறித்து அவர் பதிவிட்ட டுவிட்டர் கருத்துக்கள், போராட்டக்காரர்களுக்கு ஊக்கமளித்த அதேவேளை, அப்போதைய ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு பெரும் தலையிடியாக இருந்தது.



அதுமட்டுமன்றி, ‘அரகலய’வை அமெரிக்கா தான் பின்னணியில் நின்று இயக்கியது என்பதும், அதற்கு எதிராக கோட்டாபாய இராணுவ ரீதியான கட்டுப்படுத்தும் தீவிரப்பாதைக்கு செல்லாமல் இருந்ததின் பின்னணியில் ஜூலி சங்கே இருந்தார் என்பதும் பகிரங்கமான குற்றச்சாட்டுக்களாகும்.

அதுமட்டுமன்றி, அரகலயவின் முடிவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்துடன், ஜூலி சங் இலங்கையின் வரைபடத்தைத் தனது காலில் பச்சை குத்திக் கொண்டமை, நாட்டின் மீதான அவரது அதீதமான பற்றாக ஒரு தரப்பினரால் வெளிப்படுத்தப்பட்டாலும்;, ‘இலங்கையைத் தனது காலடியில் வைத்திருக்கும் ஏகாதிபத்திய மனோபாவத்தின் அப்பட்டமான வெளிப்பாடு’ என்றே தென்னிலங்கையில் பார்க்கப்பட்டது.

2024இல்அவரது பதவிக்காலம் முடிவடையவிருந்தும், இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மையைக் கருத்திற்கொண்டு அமெரிக்காவின் பைடன் நிர்வாகம் அவரது சேவையை சொற்பகாலம் நீடித்தது. அதன்பின்னர் எலிசபெத் கே. ஹொர்ஸ்ட் பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும் செனட்டின் அங்கீகாரம் கிடைப்பதற்குள் டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்துவிட்டார்.



அமெரிக்காவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தால் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அதிகாரத்திற்கு வந்ததும், தனது விசுவாசியான எரிக் மேயரை கடந்த ஜூலை மாதம் நியமித்து செனட்டிலும் அங்கீகாரத்தைப் பெற்ற நிலையில் சேவை நீடிப்பில் இருந்த 30 தூதுவர்களை உடனடியாக மீளஅழைத்து உத்தரவிட்டதன் விளைவாகவே ஜூலி சங் விடைபெற வேண்டியதாயிற்று.

இந்நிலையில் அவருடைய இராஜதந்திர சேவைக் காலத்தில் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான இடதுசாரி அரசாங்கத்தை அமெரிக்காவின் விருப்பங்களுக்கு இணங்கச் செயற்பட வைப்பதற்கான இணக்கப்பாடுகளை பெற்றுக்கொண்டதில் ஜூலி சங் மிகப்பெரிய இராஜதந்திர வெற்றியைப் பெற்றுள்ளார்.

அதுமட்டுமன்றி, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கைக் குறைக்கும் அமெரிக்காவின் மூலோபாயத்தில் ஜூலி சங் மிகத் தீவிரமாகச் செயற்பட்டார். இவரது பதவிக்காலத்தில் இலங்கை பாதுகாப்புத் துறைக்கு எல்லையற்ற ஒத்துழைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

2022 ஆகஸ்ட் மாதம், அமெரிக்கக் கடலோரக் காவல் படையின் ‘டக்ளஸ் முன்ரோ’ எனும் கப்பல் இலங்கையின் ஆழ்கடல் கண்காணிப்பில் கடற்படையிடம் கையளிக்கப்பட்டது. 2024 ஜூன் மாதம், கடல்சார் போதைப்பொருள் கடத்தல் மற்றும் மனிதக் கடத்தலைத் தடுப்பதில் இலங்கையின் வான்வழித் திறனை மேம்படுத்தும் பேரில் அதிநவீன கண்காணிப்பு விமானம் வழங்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில், இலங்கை கடலோரப் பகுதிகளில் அதிநவீன ராடர் கட்டமைப்புகள் அமெரிக்க நிதி உதவியுடன் நிறுவப்பட்டன. இது சீனா உள்ளிட்ட வெளிநாட்டு ஆய்வு மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களின் நடமாட்டத்தை துல்லியமாகக் கண்காணிப்பதற்கு வழிவகுத்துள்ளது.

அதுமட்டுமன்றி ஜூலி சங் 2026இல் விடைபெறும் இத்தருணத்திலும் கூட பெல் 206ரக ஹெலிகொப்டர்கள் பத்தை விமானப்படைக்கு வழங்குவதற்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்தியுள்ளார்.



ஜூலி சங்கின் காலத்தில் வழங்கப்பட்ட அமெரிக்க ஒத்துழைப்புக்கள் இலங்கையின் பாதுகாப்புத்துறை ஏறக்குறைய அமெரிக்காவின் ‘பிடி’க்குள் சென்றுவிட்டது என்ற நிலைமையே தற்போது காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி இலங்கையின் பொருளாதார நெருக்கடியான சூழலில் தானாக உட்புகுந்துகொண்ட ஜூலி சங், சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர்கள் கடனைப் பெறுவதற்கு அமெரிக்காவின் முழுமையான ஆதரவைப் உறுதி செய்தார்.

2022 முதல் 2025 வரை சுமார் 300 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான நிதியுதவியை விவசாயம், கல்வி மற்றும் ஊட்டச்சத்துத் திட்டங்களுக்காக யு.எஸ்.எய்ட் நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு வழிசமைத்திருந்தார்.




2025 டிசம்பரில் இலங்கையைத் தாக்கிய ‘தித்வா’ சூறாவளிப் பேரழிவின் போது, 72மணி நேரத்துக் குள் 2மில்லியன் டொலர்களை அனர்த்த உதவி நிதியாக அமெரிக்கா அறிவிப்பதற்கு காரணமாக இருந்ததோடு மேலதிகமாக 2மில்லியன் டொலர்கள் அறிவிக்கப்படுவதற்கும் காரணமாக இருந்தார்.

அதுமட்டுமன்றி இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்காக ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்த 44சத வீதமான வரியை 20சதவீதமாக குறைப்பதற்கான உரையாடல்களுக்கான பாதையை வரைந்து கொடுத்தவரும் ஜூலி சங் தான்.

மேற்படி விடயங்கள் அனைத்துமே அமெரிக்க நலன்களின் அடிப்படையில் தான் முன்னெடுக்கப்பட்டன. அதுமட்டுமன்றி, மத்தள விமான நிலையத்தை ரஷ்ய மற்றும் இந்திய நிறுவனங்கள் இணைந்து அபிவிருத்தி செய்வதை

**தொடர்ச்சி: பக்கம் 09**

# தமிழ்த்தேசிய கட்சிகளின் பலவீனம். தேசியமக்கள் சக்திக்கு பலம்!

பா.அரியநேத்திரன்

தமிழ் தேசிய கட்சிகளின் பலவீனம் தேசிய மக்கள் சக்திக்கு பலமாக மாறியது என்பதே உண்மை. கடந்த 2024, நவம்பர் 14 ல் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழ்தேசிய கட்சிகள் பெற்ற ஆசனங்களை விட தேசிய மக்கள் சக்தி கூடிய ஆசனங்களை பெற்றுள்ளனர்.

ஆனால் இந்த உண்மை வெளியில் பலருக்கு தெரியவில்லை இதனை விளங்கிக்கொள்ளாமல் அல்லது விளங்கினாலும் அதனை மறைப்பதற்காக சிலர் தவறான கருத்துக்களை பரப்புவதை காணலாம்.

குறிப்பாக இலங்கை தமிழ் அரசுக்கட்சி வடகிழக்கில் இருந்து மக்களால் எட்டுமாவட்டங்களிலும் 07 பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டனர் அந்த



07 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் 01 தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் கிடைத்தமையால் மொத்தமாக 08 ஆசனங்கள் தமிழரசுக்கட்சிக்கும், தமிழ்தேசிய மக்கள் முன்னணிக்கு 01 ஆசனமும், ஜனநாய தமிழ்தேசிய கூட்டணி க்கு 01 ஆசனமாக தமிழ்தேசிய கட்சிகளுக்கு மொத்தம் 12 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. தமிழ்தேசிய கட்சி சாராத சுயேட்சை குழுவில் வைத்தியர் அர்ச்சுனா தெரிவானார்.

ஆனால் வடகிழக்கில் எட்டு மாவட்டங்களில் இருந்து தேசிய மக்கள் சக்திக்கு மொத்தமாக 12, ஆசனங்கள் கிடைத்துள்ளன, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு 08, ஆசனங்கள் கிடைத்ததை வடக்கு கிழக்கு மக்கள் தமிழரசுக் கட்சியை ஆதரித்துவிட்டனர். தாமே வடகிழக்கு மக்களின் ஆணையை பெற்ற பெரிய கட்சி, வடக்கு கிழக்கு மக்களின் ஆணை பெற்ற கட்சி என கூறுவது பச்சைப்பொய் இது முழுப்பூசணியை சோற்றில் புதைக்கும் தவறான கருத்தாகும்.



தேசியமக்கள் சக்தி கட்சியில் 07 தமிழர்களும், 05, சிங்களவர்களும் வடகிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர் 05 சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களை நீக்கி விட்டு பார்த்தாலும் 07 தமிழர்கள் தேசியமக்கள் சக்தியிலும், 07 தமிழர்கள் தமிழரசுக்கட்சிலும் தெரிவுசெய்யப்பட்டனர் என்றால் வடகிழக்கு தமிழர்கள் தமிழ்தேசிய கட்சிகள் மீது கொண்ட வெறுப்பே சிங்கள கட்சியான தேசியமக்கள் சக்திக்கு இந்தளவு ஆசனங்கள் கிடைத்தமைக்கான காரணம் என்பதை புரிந்து கொள்வது ஈழத்தமிழர்களின் கடமை.

கடந்த 2024, பாராளுமன்ற தேர்தலில் தமிழ்தேசிய கட்சிகளாலும். தேசிய மக்கள் சக்தியாலும் வடக்கு கிழக்கில் எட்டுமாவட்டங்களிலும் இருந்து தெரிவான உறுப்பினர்கள் விபரம்...

**இலங்கைத்தமிழ் அரசுக் கட்சி.**

1. சிவஞானம் சிறிதரன், யாழ்ப்பாணம்.
2. துரைராசா ரவிகரன், வன்னி.
3. சண்முகம் குகதாசன், திருகோணமலை.
4. ஞானமுத்து ஸ்ரீநேசன், மட்டக்களப்பு.
5. இராஜபுத்திரன் சாணக்கியன், மட்டக்களப்பு.
6. இளையதம்பி ஸ்ரீநாத், மட்டக்களப்பு.
7. கவீந்திரன் கோடீஷ்வரன்,அம்பாறை.
8. பத்திநாதன சத்தியலிங்கம்.தேசியபட்டியல்

**அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்**

1 கஜேந்திரகுமார். பொன்னம்பலம் - யாழ்ப்பாணம்

**ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி.**

தமிழீழ விடுதலை இயக்கம்

2 செல்வம் அடைக்கலநாதன் - வன்னி

**சுயேட்சைக் குழு**

1. இராமநாதன் அர்சுனா-யாழ்ப்பாணம்.

**தேசிய மக்கள் சக்தி**

1. கருணானந்தன் இளங்குமாரன், யாழ்ப்பாணம்.
2. சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜன், யாழ்ப்பாணம்.
3. ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன்,யாழ்ப்பாணம்.
4. செல்வராசா திலகேஷ்வரன்,வன்னி.
5. மயில்வாகனம் ஜெகதீஷ்வரன்,வன்னி.
6. கந்தசாமி பிரபு,மட்டக்களப்பு.
7. அருண் கேமச்சந்திரன்,திருகோணமலை.
8. ரொஷான் அக்மீமன,திருகோணமலை.
9. வசந்த பியதிஸ்ஸ,அம்பாறை.
10. . மஞ்சுள ரத்நாயக்க,அம்பாறை.
11. பிரியந்த விஜேரத்ன,அம்பாறை.
12. முத்துமெனிக்கே ரத்வத்தே,அம்பாறை.

இலங்கை சுதந்திரம் அடைந்த 1948 தொடக்கம் 2020 வரை நடைபெற்ற 16 பாராளுமன்ற தேர்தல்களில் வடகிழக்கில் இருந்து எந்த ஒரு சிங்கள பெரும்பான்மை கட்சியும் 12 பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரு கட்சியில் இருந்து தெரிவான சரித்திரம் இல்லை. ஈழ விடுதலைப் போராட்டம் அகிம்சை ரீதியிலும், ஆயுத ரீதியிலும் விடுதலைக்காக போராடிய மண்ணில் இதுவரை தமிழ்த்தேசிய கட்சிகளே வடகிழக்கில் கூடிய ஆசனங்களை பெற்ற வரலாறு இருந்தது சிங்கள கட்சி எதற்கும் அந்த வரலாறு இல்லை ஆனால் அது 17 வது பாராளுமன்ற தேர்தலில் 2024 ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முறியடித்துள்ளது என்ற கசப்பான உண்மையை ஈழத்தமிழர்களும், புலம்பெயர் தமிழர்களும் புரிந்து கொள்ள வேண்டும். இது தமிழ்தேசிய கட்சிகளாக 2009 மே 18 க்கு பின்னர் குட்டிபோட்டு பத்து



பன்னிரண்டு காட்சிகளாகவும், தலைவர்களாகவும் உள்ளவர்கள் சிந்திக்க வேண்டும்.

கடந்த தமிழர் திருநாள் 2026,ஜனவரி 16 ல் ஜனாதிபதி அநுரா யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பொங்கல் விழாக்களில் கலந்துகொண்டு சில அபிவிருத்தி திட்டங்களையும் ஆரம்பித்துள்ளார். கடந்த ஒருவருடத்தில் அவர் யாழ்ப்பாணத்துக்கு நான்கு தடவைகள் சென்றுள்ளார். 2025 ஜனவரி 31 மே 17 செப்டம்பர் 01 தற்போது 2026,ஜனவரி 16 ஆகிய தினங்களில் அவர் பதவி ஏற்ற பின்னர் யாழ்ப்பாணத்தில் சென்று பல அபிவிருத்திகளை மேற்கொள்ளும் நிலைமை தமிழ்தேசிய கட்சிகளின் பலவீனத்தால் ஏற்பட்டது என்பதே உண்மை.

இந்த வருடம் அல்லது அடுத்த வருடம் சில வேளை மாகாணசபை தேர்தல் வடக்கிலும், கிழக்கிலும் இடம்பெற்றால் தேசியமக்கள் சக்தியின் ஆதரவு இல்லாமல் செய்து வடமாகாண சபையையும், கிழக்கு மாகாண சபையையும் தனித்து ஆட்சியமைக்க கனவு காணும் தமிழ்தேசிய கட்சிகள் இப்போதே சிந்தித்து தாம் விட்ட தவறை சீர் செய்து ஒற்றுமை பட வேண்டும். இல்லை எனில் தனித்தனி கட்சிகளாக சிதறி பல சின்னங்களில் மாகாணசபை தேர்தலில் போட்டியிட்டால் அது மேலும் தேசிய மக்கள் சக்தி ஆளும் தரப்புக்கே சாதகமாக மாறும்.

இலங்கைத் தமிழ் தேசிய கட்சிகள் தற்போதைய பாராளுமன்றத்தில் எட்டு ஆசனங்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ள கட்சி என மார்தட்டினாலும் அந்த எட்டு ஆசனங்களை பெற்ற வடக்கு கிழக்கில் 12, ஆசனங்களை சிங்கள கட்சிக்கு தாரைவார்த்துக் கொடுத்த உண்மையை நெஞ்சில் கைவைத்து ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

தமிழ் தேசிய கட்சிகள் எல்லாம் ஒற்றுமைப்பட வேண்டும் என தமிழரசுக் கட்சித்தலைமை கூறுவதற்கு முன்னர் தமிழரசுக்கட்சி இரண்டு அணியாக 2024 ஜனவரி 21 தொடக்கம் 2026 ஜனவரி 21 வரை இரண்டு வருடங்களாக இரண்டு அணியாக நிரந்தர தலைவரோ, நிரந்தர செயலாளரோ இன்றி மத்தியகுழுவில் சுருங்கி கட்சி உள்ளது என்பதை உணரவேண்டும். தமிழ்த்தேசிய உறுதியான கொள்கை உள்ளவர்களை ஓரம் கட்டி ஒதுக்கி செயல்படுவதால் எதிர்வரும் மாகாணசபை தேர்தல்களில் வடக்கு மாகாண சபையிலும், கிழக்கு மாகாண சபையிலும் எதிர்பார்த்த ஆசனங்களை பெறமுடியாது.

கடந்த 2013 ல் வடமாகாணசபையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அறுதிப்பெரும்பான்மை ஆசனங்களுடன் வடமாகாண சபையை கைப்பற்றியது போல் இம்முறை தமிழரசுக்கட்சி அறுதிப்பெரும்பான்மை ஆசனங்களை பெற முடியாது. ஏனைய தமிழ்தேசிய கட்சிகளும் பிரிந்து தனித்தனியாக வடமாகாணசபை தேர்தலில் பல சின்னங்களில் போட்டியிட்டால் வாக்குகள் சிதறும் நிலை ஏற்பட்டு மீண்டும் தேசிய மக்கள் சக்திக்கு ஆசனங்கள் அதிகரிக்க வாய்புகள் உண்டு.



கிழக்கு மாகாணசபை தேர்தல்களில் 2008 ல் தமிழர் ஒருவர் முதலமைச்சரான வரலாறும் சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் அவருடைய தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் கேட்டு தெரிவாகவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர கட்சியில் வெற்றிலைச் சின்னத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையான், ஹிஸ்புல்லா இருவரும் சேர்ந்து போட்டியிட்டதால் அந்த கட்சிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரும், முஸ்லிம்களும் வாக்களித்தமையால் பிள்ளையானும், கிஷ்புல்லாவும் வெற்றிபெற்றனர். இருவரும் ஏட்டிக்கு போட்டியாக தாமே முதலமைச்சர் என கூறி ஊடகங்களில் கருத்து கூறினர்.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பிள்ளையானை முதலமைச்சராகவும், கிஷ்புல்லாவை சுகாதார அமைச்சராகவும் நியமித்தார்.

2012 கிழக்கு மாகாணசபை தேர்தலில் முதன்முதலாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு போட்டியிட்டபோதும் கிழக்கு மாகாணசபையில் 11 ஆசனங்களை மட்டுமே பெற முடிந்தது அதில் நஜீப் ஏஅகமட் முதலைமைச்சரானார். பின்னர் 2015 நல்லாட்சி அரசில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இணக்கப்பாடு அரசியல் ஆட்சியாளருடன் சேர்ந்து இயங்கியதால் 2015 ல் கிழக்கு மாகாணசபையிலும் இணக்கப்பாடு அரசியல் ஆட்சி செய்தனர். அதிலும் முதலமைச்சர் பதவி முஸ்லிம் உறுப்பினர் நசீர் அகமட் பெற்றார். தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு இரண்டு அமைச்சர்பதவியும், பிரதி தவிசாளர் பதவியும் கிடைத்தன. அதனால் கிழக்கு மாகாணத்தில் மக்கள் ஆதரவை தவிர

தொடர்ச்சி: பக்கம் 13

# முத்துநகர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழித்த அநுர அரசாங்கம்





கின்னியான்

வடகிழக்கு என்பது தமிழர் தாயகம் என்று இருந்த போதிலும் தனியார் நிலங்களை அபிவிருத்தி என்ற போர்வையில் அபகரிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதன் ஒரு சம்பவமாக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முத்து நகர் விவசாயிகளின் சுமார் 800 ஏக்கர் விவசாய நிலங்கள் சூரிய மின்சக்தி அபிவிருத்தி என்ற போர்வையில் அபகரிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் வாழ்வாதாரத்துக்கு போராடும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

53 வருட காலமாக விவசாயம் செய்து வந்த விவசாயிகளின் நிலையே தற்போது இவ்வாறாக மாறியுள்ளது.குறித்த காணிகளை மீளப்பெற்றுத்தரக்கோரிய பல போராட்டங்களை விவசாயிகள் முன்னெடுத்தனர். ஜனாதிபதி செயலகம் தொடக்கம் பிரதமர் அலுவலகம் வரை கண்ணீர் சிந்தி போராடிய போதும் தீர்வு கிடைக்கவில்லை. ஆனாலும் சுமார் 70 நாட்களாக தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தை திருகோணமலை மாவட்ட செயலகம் முன் முன்னெடுத்தனர்.

போராட்டங்களை முன்னெடுத்த போதிலும் வெற்றியடையவில்லை. அப்பாவி விவசாயிகளை கைது செய்தும் சிறையில் அடைத்த வரலாறுகளும் தான் உண்டு.

இவ்வாறான நிலையில் பேரிடர் மற்றும் டித்வா புயல் காரணமாக போராட்டத்தை அவர்கள் கைவிட்டார்கள். இந்த நிலையில், 352 விவசாயிகளும் வாழ வழியின்றி தங்களது அன்றாட வாழ்க்கையை கழிப்பதில் பெரும் துன்பத்தை எதிர்நோக்கியுள்ளனர்.



இதனால் பாடசாலை செல்லும் பிள்ளைகள், அன்றாட செலவுகள் என பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இது குறித்து இலக்கு மின்னிதழுக்கு முத்து நகர் தகரவெட்டுவான் ஒன்றினைந்த விவசாய சம்மேளனத்தின் செயலாளர் திருமதி சஹீலா சபூர்தீன் தெரிவிக்கையில், “முத்து நகர் விவசாயிகளின் சத்தியாக்கிரக போராட்டம் 70 நாட்களாக திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக தொடர்ந்தது. அதன் பின்னர் துரதிஷ்டவசமாக இயற்கை பேரிடர் காரணமாக அது எங்களுக்கு சாதகமாக இன்றி அரசுக்கு சாதகமாக அமைந்தது. இதனால் எங்கள் போராட்டத்தை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போதைய போராட்ட நாட்களில் பிரதமர் அலுவலகம் ஊடாக பத்து நாட்கள் கால அவகாசம் கேட்டிருந்த போதிலும் அதுவும் போதாது என கூறி ஏமாற்றப்பட்டோம். அதன் பின்னர் கடந்த வருடம் (2025) ஒக்டோபர், நவம்பர் வரையான காலப்பகுதியில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம்,தம்பலகாமம்,கிண்ணியா,குச்சவெளி ஆகிய நான்கு பிரதேச செயலகங்கள் ஊடாக விவசாயிகளின் தகவல்கள் திரட்டப்பட்டது. ஆனால் தற்போது வரைக்கும் தீர்வு கிடைக்கவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதியமைச்சரால் 2024,2025 க்கான பெரும்போக நெற் செய்கைகளுக்கான நஷ்ட ஈடும், மாற்றுக் காணிகளும் தருவதாக கூறியே விவசாயிகளின் தகவல்களை திரட்டினார்கள்.352 விவசாயிகளை சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கிய விவசாயிகள் இங்கு இருந்த போதும் அந்த பட்டியலில் இருந்து விவசாயிகளின் விபரங்களை எவ்வாறு குறைக்க முடியும் என்பதை வைத்தே இவர்கள் தகவல் திரட்டியதாக அறிந்து கொண்டோம்.



இதன் போது விவசாயிகளில் அரச உத்தியோகத்தர்கள் உள்ளார்களா? ,மோட்டார் சைக்கிள் உள்ளதா என கட்டம் கட்டமாக விபரங்களை திரட்டினார்கள் என்பதையும் அறியக்கூடியதாக இருந்தது. 352 விவசாய குடும்பங்களின் 800 ஏக்கர் விவசாய காணிகளை அள்ளி சுருட்டி சூரிய மின்சக்தி உற்பத்திக்காக கொடுத்தார்கள். இதற்கு நாங்கள் எதிர்ப்பில்லை. அதற்கு பதிலாக மாற்று நிலங்களை தாருங்கள் என்றே கேட்கிறோம். அதை வைத்து வாழ்வாதாரத்தை கொண்டு செல்வோம். அரச ஊழியர் என்று சாட்டு போக்குகளை இங்கு கூறாமல் அவர்களுக்கு குத்தகைக்காவது தாருங்கள். இவர்களுக்கு வேறு சொந்த வயல் நிலங்கள் இருந்தால் அவர்களை நீக்குங்கள். இவ்வாறாக தீர்வுகளை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மக்கள் பிரதிநிதிகளை சந்திக்க முயன்ற போதும் நேரிட்ட போதிலும் அது பலன் அளிக்கவில்லை.

ஜனாதிபதி தொடக்கம் கீழ் மட்ட பிரதிநிதிகள் வரை எங்களுடன் கதைக்க தயாரில்லை. அப்போதைய மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது எஞ்சிய நிலங்களில் விவசாய செய்கையில் ஈடுபடலாம் என கூறிய போதிலும் எங்களை தற்போது வரை செய்ய விடாது தடுத்துள்ளனர். அதனை அண்டிய அம்மன்குள விவசாயிகள் நெற் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன் போது ஆளுனர் உட்பட உயர்மட்ட அதிகாரிகள் அரசியல் பிரதிநிதிகள் என பலரும் இருந்தனர்.

தீர்வு இல்லாமல் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளோம்.எமது விளை நிலங்களை அழித்து குளங்களை நாசமாக்கியுள்ளனர். டித்வா பேரிடரின் பின்னர் கூலி தொழில்களுக்கு கூட செல்ல முடியாது பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளோம். எங்கள் கோரிக்கைகளை அரசாங்கம் காது கொடுத்து கேட்கவில்லை. எமது பிரச்சினைகளுக்கு செவிமடுத்து ஆக்கபூர்வமான தீர்வை பெற்றுத்தர வேண்டும். ஆகவே எங்களுக்கான மாற்று நிலங்களை தாருங்கள் எனவும் கோரிக்கையை உரிய அரச தரப்புக்களுக்கு முன்வைப்பதாக மேலும் தெரிவித்தார்”

இவ்வாறாக பாரிய பொருளாதார நெருக்கடிகளுடன் நெற்செய்கைக்காக காத்திருந்த விவசாயிகள் அநுர அரசாங்கத்தால் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் ஆட்சிக்கு வரமுன்னர் தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு சார்பாகவும் அப்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் வீதிக்கு இறங்கி பல போராட்டங்களை முன்னெடுத்தனர். தற்போதைய நிலையில் அதனை மறந்து அபிவிருத்தி என்ற போர்வையில் வெளிநாட்டு தனியார் கம்பனிகளுக்காக மக்கள் நிலங்களை அடாத்தாக வழங்கியுள்ளனர்.



இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த விவசாயியான பாபு தெரிவிக்கையில், “போராட்டம் மூலமாக வெல்வோம் என்ற நம்பிக்கையில் போராடினோம். ஆனால் முடிவு எட்டவில்லை. இதனால் 352 விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.திருகோணமலை மாவட்ட ஆளும்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்வுகளை தருவதாக கூறி முத்து நகர் விவசாயிகளை நடுத் தெருவுக்கு தள்ளியுள்ளனர்.

ஜனாதிபதி செயலகம் வரை போராட்டத்தில் ஈடுபட்டோம். உங்களை நம்பியே தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தோம். எனவே எங்கள் போராட்டத்தை மீண்டும் தொடர்வோம். உயிர் போனாலும் தீர்வு கிடைக்கும் வரை போராடுவோம். தமிழ் ,முஸ்லீம் என்ற பேதமின்றி இனவாதமின்றிய நிலையில் எங்கள் காணிகளை பெற்றுத்தாருங்கள். ஆளும்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களே சுமூகமான தீர்வை தராவிட்டால் போராட்டம் மீண்டும்

தொடர்ச்சி: பக்கம் 13

# திருக்கோணேஸ்வரத்தில் செயற்றிறன் அற்ற நிர்வாகத்தால் ஏற்படும் பாதிப்புகள்



**திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம் ஆலயம் எதிர் கொண்டு வரும் நிர்வாகச் சீர்கேடுகள், தொல்லியல் திணைக்களத்தின் தலையீடுகள், கன்னியா வெந்நீரூற்று விவகாரம், ஆலய வளாக வணிகமயமாக்கல், அன்னதான சிக்கல்கள் மற்றும் சமய அடையாளப் பிரச்சினைகள் குறித்து இந்த நேர்காணல் அமைந்துள்ளது.**

**இது தொடர்பில் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் பொதுச்சபை உறுப்பினரான திருமிகு ஒப்பிலாமணி குலேந்திரன் அவர்கள் விரிவாக விளக்குகின்றார்.**

**கேள்வி :**

**திருக்கோணேஸ்வரம் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம். இன்று அந்த ஆலயத்தைச் சுற்றி பல கவலையளிக்கும் விடயங்கள் பேசப்படுகின்றன. தற்போது அங்கு என்ன நடைபெறுகிறது?**

**பதில் :**

திருக்கோணேஸ்வரம் என்பது தமிழர்களின், குறிப்பாக சைவ மக்களின் வரலாற்று, ஆன்மீக அடையாளத்தின்மையமாக விளங்கும் ஒரு புராதன திருத்தலம். திருஞானசம்பந்தர் தேவாரம் பாடிய இந்த ஆலயம், காலங்காலமாகஈழத்தின் பல பகுதிகளிலிருந்தும் யாத்தி ரிகர்கள் வந்து வழிபடும் புனித தலமாக இருந்து வந்தது. ஆனால் சமீபகாலங்களில் இந்த ஆலய நிர்வாகத்தில் ஏற்பட்ட அலட்சியம், தெளிவற்ற முடிவுகள் மற்றும் ஆளுமையற்ற செயல்பாடுகள் காரணமாக அதன் இயல்பான புனித சூழல் சீர்குலையத் தொடங்கியுள்ளது.

ஆலயத்தை பாதுகாக்க வேண்டிய நிர்வாகமே இன்று அதனை பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாக்கியிருப்பது மிகுந்தவேதனையை ஏற்படுத்துகிறது.

**கேள்வி :**

**முன்பிருந்த ஆலய நிர்வாகத்துடன் ஒப்பிடுகையில், இன்றைய நிர்வாகத்தில் என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது?**

**பதில் :**

முன்பாக சட்டத்தரணி செல்வராஜா மற்றும் அவரது மகன் மூக்குச் செல்வராஜா ஆகியோர் நிர்வாக பொறுப்பில்இருந்த காலத்தில், அரசியல் ரீதியாக மிகக் கடினமான சூழல் நிலவினாலும், ஆலய நிர்வாகம் ஒரு ஒழுங்குடன்செயல்பட்டது. யாத்திரிகர்கள் வருகையில் சிரமங்கள் இருந்தபோதும், திருவிழாக்கள், பூஜைகள், ஆலய பராமரிப்புஆகியவை முறையாக நடந்தன. அவர்களின் மறைவுக்குப் பிறகு நிர்வாக பொறுப்புகளை ஏற்றவர்கள், குறிப்பாகபரஞ்ஜோதி அவர்களின் மகன் பரமேஸ்வரன் பொறுப்பேற்ற காலத்தில்தான் அரசியல் அழுத்தங்களுக்கும் அரசஅதிகாரங்களுக்கும் அதிகமாக இடமளிக்கப்பட்டது. இதன் விளைவாக ஆலய நிர்வாகம் தனது உரிமைகளையும்கடமைகளையும் வலுவாக நிலைநாட்ட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது.

**கேள்வி :**

**ஆலய வளாகத்தில் கடைகள் அதிகரித்ததுக்கான பின்னணி என்ன?**

**பதில் :**

ஆலய வளாகத்திற்குள் கடைகள் உருவானது இயல்பான வளர்ச்சியல்ல. ஒரு அமைச்சர் கோட்டை வளாகத்திற்குள் அரச விடுதியை பெற்றுக்கொண்டதன் பின்னர், வெளிமாவட்டங் களிலிருந்து தொழிலாளர்கள்கொண்டு வரப்பட்டு ஆலய சூழலில் கடைகள் அமைக்கப்பட்டன. இது ஆலயத்தின் புனிதத்தன்மைக்கு முற்றிலும்முரணானது. பக்தர்கள் தரிசனத்திற்குச் செல்லும் பாதைகள் குறுகி, அமைதி குலைந்தது. பல இந்து அமைப்புகள்மற்றும் சமூக பிரதிநிதிகள் எதிர்ப்புகளை பதிவு செய்தபோதும், நிர்வாகம் அவற்றை கட்டுப்படுத்தும் ஆற்றலைவெளிப்படுத்தவில்லை.

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு ஒப்பிலாமணி குலேந்திரன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**கேள்வி :**

**தொல்லியல் திணைக்களம் இந்தச் சூழலில் எவ்வாறு தலையிடுகிறது?**

**பதில் :**

தொல்லியல் திணைக்களம், ஆலய நிர்வாகத்தின் பலவீனங்களை பயன்படுத்திக் கொண்டு தலையீடு செய்கிறது. ஆலய வளாகம் சுத்தமாக இல்லை, பராமரிப்பு இல்லை என்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து, ஆலய உரிமைகளில் கைவைக்க முயல்கிறது. ஆனால் உண்மையில் தொல்லியல் திணைக்களம் பொறுப்பேற்ற பகுதிகளில் கூடதேவையான சுகாதார வசதிகள் மற்றும் பராமரிப்பு முறையாக செய்யப்படவில்லை. இதனால் இந்த தலையீடு ஆலயபாதுகாப்பிற்காக அல்ல, அதிகார விரிவாக்கத்திற்காகவே என்ற எண்ணம் மக்களிடையே வலுப்பெற்றுள்ளது.

**கேள்வி :**

**கன்னியா வெந்நீரூற்று தொடர்பான சர்ச்சையின் அடிப்படை என்ன?**

**பதில் :**

கன்னியா வெந்நீரூற்று தமிழர்களின் புராதன வழிபாட்டு இடமாக இருந்து வந்தது. ஆனால் அந்த இடம்மெதுவாக "இராவணன் கோட்டம்" எனப் பெயரிட்டு பௌத்த அடையாளமாக மாற்றப்பட்டு வருகிறது. இதற்கு எதிராகவரலாற்று ஆதாரங்களும் சட்ட ரீதியான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. முன்னாள் நீதிபதி இளஞ்செழியன் அவர்கள், தொல்லியல் திணைக்களம் இதில் கூடுதல் தலையீடு செய்யக் கூடாது என தீர்ப்பளித்திருந்தார். இருப்பினும், ஆலய நிர்வாகம் உரிமைகளை வலுவாக பதியாத காரணத்தால், அந்த இடம் இன்று தமிழர்களிடமிருந்து பறிபோகும்அபாய நிலையை அடைந்துள்ளது.

**கேள்வி :**

**கோணேஸ்வரம் செல்லும் வழியில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறதே, அது எந்தஅளவு உண்மை?**

**பதில் :**

ஆரம்பத்தில் அந்த இடத்தில் ஒரு அரசமரம் மற்றும் சிறிய புத்தர் சிலை மட்டுமே இருந்தது. காலப்போக்கில்அந்த பகுதி மெதுவாக விரிவுபடுத்தப்பட்டு, வணிக நோக்கங்களும் இணைக்கப்பட்டன.

கரையோர பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சில கட்டுமானங்கள் தடை செய்யப்பட்டாலும், புத்தர் சிலையை முன்வைத்துநில உரிமை உருவாக்கும் முயற்சிகள் தொடர்ந்தன. இது திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் அடையாளத்திற்கும்அதன் சுற்றுச்சூழலுக்கும் நேரடியான சவாலாக அமைந்துள்ளது.

**கேள்வி :**

**அன்னதானம் தொடர்பான பிரச்சினை எவ்வாறு உருவானது?**

**பதில் :**

அன்னதானம் என்பது பக்தி சார்ந்த ஒரு சேவையாக இருக்க வேண்டியது.ஆனால் திருக்கோணேஸ்வரத்தில்அது நிர்வாக குழுக்களுக்கிடையிலான முரண்பாடுகளுக்கும் போட்டிகளுக்கும் காரணமாக மாறியது. ஒரே நேரத்தில்பல இடங்களில் அன்னதானம் நடத்தப்பட்டதால் பயனாளிகள் யார் என்ற தெளிவின்மை ஏற்பட்டது. பெரும்பாலும்கடை வைத்திருப்பவர்களே அன்னதானம் பெறும் நிலை உருவானது. இதனால் உண்மையான பக்தர்களும் கிராம மக்களும் புறக்கணிக்கப்பட்டதாக உணர்ந்தனர். இந்த நிலைமை பெரும் சலசலப்புகளுக்கும் குழு மோதல்களுக்கும் வழிவகுத்தது.

**கேள்வி :**

**ஆலயத்தில் சாதி வேறுபாடு இருப்பதாக கூறப்படுவது எந்த அளவு உண்மை?**

**பதில் :**

ஒரு சைவ திருத்தலத்தில் சாதி அடிப்படையிலான வேறுபாடுகள் பேசப்படுவது மிகுந்த வேதனையளிக்கிறது. இருப்பினும், சில நிர்வாக உறுப்பினர்களின் அணுகுமுறைகள் இத்தகைய சந்தேகங்களை உருவாக்கியுள்ளன. இதுஆலயத்தின் ஆன்மீக அடையாளத்திற்கு எதிரானது. அதே நேரத்தில் சமீப காலமாக படித்த இளைஞர்கள் பொதுச்சபையில் இணைந்திருப்பது ஒரு நல்ல மாற்றத்தின் அறிகுறியாக பார்க்கப்படுகிறது.

**கேள்வி :**

**இந்நிலையில் திருக்கோணேஸ்வரம் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

**பதில் :**

திருக்கோணேஸ்வரம் என்பது ஒரு ஆலயம் மட்டுமல்ல; அது ஈழத் தமிழர்களின் பண்பாட்டு, சமய

தொடர்ச்சி: பக்கம் 13

# மலையகப் பகுதிகளில் மாணவர் இடைவிலகல்
# எதிர்கால கல்வியில் சவால்



மருதன் ராம்

இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள், கல்வித்துறையில் நீண்டகாலமாகப் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். மலையக பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மாணவர் இடைவிலகல் என்பது தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. இதில் ஆரம்பம் தொட்டு பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன.



இந்த நிலையில் 2022ஆம் ஆண்டு வரையான தரவுகளின் அடிப்படையில் இலங்கையின் கொள்கை கற்கைகள் ஆய்வு நிறுவனம் (Institute of Policy Studies of Sri Lanka) வெளியிட்டுள்ள தகவல்கள் மற்றும் அண்மையில் மலையகத்தைத் தாக்கிய ‘டிட்வா’ புயலின் கோரத்தாண்டவம் என்பன மலையகக் கல்வியின் அடித்தளத்தை மீண்டும் கேள்விக்குள்ளாக்கியுள்ளன. மாணவர் இடைவிலகல் என்பது வெறும் புள்ளிவிபரம் மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் எதிர்காலக் கனவுகள் சிதைக்கப்படுவதன் அடையாளமாகும். தற்போதைய அரசாங்கத்தின் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் இத்தகைய சூழலில் எந்தளவுக்கு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது தொடர்பில் கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாகும்.



2022ஆம் ஆண்டு வரையான தரவுகளின்படி, மலையகப் பகுதிகளில் பாடசாலை மாணவர் இடைவிலகல் விகிதம் தேசிய மட்டத்தை விட மிக அதிகமாக உள்ளது. குறிப்பாக, தோட்டப்புறங்களில் ஆரம்பக் கல்வியை விட இடைநிலைக் கல்வியில் மாணவர்கள் அதிகளவில் விலகிச் செல்கின்றனர். இதற்கு பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன. அதன்படி, நாட்டின் பொருளாதார வீழ்ச்சி தோட்டத் தொழிலாளர்களின் வருமானத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. இதனால் பிள்ளைகளின் கல்விச் செலவுகளை ஈடுகட்ட முடியாமல், அவர்களைக் கூலி வேலைகளுக்கு குறிப்பாக கொழும்பு போன்ற நகரங்களில் உணவகங்கள் மற்றும் வீடுகளில் வேலைக்கு அனுப்பும் நிலை தொடர்கிறது.

பெரும்பாலான தோட்டப்புற பாடசா லைகள் ‘வகை 3’ என்ற கட்டமைப்புக்குள் காணப்படும் பாடசாலைகளாகும். இங்கு கற்கும் மாணவர்களுக்கு உயர்தர வகுப்புகளுக்கு செல்வதற்கு அருகிலுள்ள நகரங்களுக்குப் பயணம் செய்ய வேண்டியுள்ளது. போக்குவரத்துச் செலவு மற்றும் தூரம் காரணமாகப் பல மாணவர்கள் இடைவிலகுகின்றனர்.

## டிட்வா புயலும் மலையகக் கல்வியில் ஏற்பட்ட பாரிய தாக்கமும்

இந்த பின்னணியில் 2025ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையைத் தாக்கிய ‘டிட்வா’ புயல், மலையகத்தின் கல்விச் சூழலை நிலைகுலையச் செய்துள்ளது. இது மாணவர் இடைவிலகலைத் துரிதப்படுத்தும் ஒரு காரணியாக மாறியுள்ளது. நுவரெலியா, பதுளை, கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான பாடசாலைகள் வெள்ளத்தினாலும் மண்சரிவினாலும் பாதிக்கப்பட்டுள்ளன.



உலக வங்கி மற்றும் யுனிசெப் அறிக்கைகளின்படி, மத்திய மாகாணத்தில் மட்டும் கல்விசார் உட்கட்டமைப்புகளுக்குப் பல மில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது. புயல் மற்றும் வெள்ளத்தினால் ஏழை மாணவர்களின் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் அழிந்துள்ளன. மீண்டும் இவற்றை வாங்கும் சக்தி இல்லாத பெற்றோர், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பத் தயங்குகின்றனர். புயலால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்குப் பாடசாலைகள் இடைக்காலத் தங்குமிடங்களாகப் பயன்படுத்தப்பட்டதால், கல்வி நடவடிக்கைகள் நீண்டகாலம் தடைப்பட்டன.

இக்காலப்பகுதியில் மாணவர்கள் கல்வியிலிருந்து அந்நியப்பட்டு, மீண்டும் பாடசாலைக்குத் திரும்புவதில் ஆர்வம் காட்டாத நிலை ஏற்பட்டுள்ளது. இவை இயற்கை மற்றும் பொதுவான காரணிகளாக இருக்கின்ற போதிலும் மாணவர் இடைவிலகலுக்கான ஆழமான காரணங்களும் உள்ளன.

மலையகத்தில் இடைவிலகல் என்பது ஒரு சங்கிலித்தொடர் போன்றது. பெற்றோரின் விழிப்புணர்வு இன்மை ஒரு முக்கிய பிரச்சினையாக காணப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளை விடவும் தற்போது பெற்றோர் இடையே விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள போதிலும் ஒப்பீட்டு அளவில் அது குறைவாகவே காணப்படுகிறது. கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு குறைந்த சமூகச் சூழல் மற்றும் மதுப்பழக்கம் போன்ற சமூகச் சீரழிவுகள் மாணவர்களின் கற்றல் சூழலைப் பாதிக்கின்றன.

மறுபுறம் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற பிரதான பாடங்களுக்கு மலையகப் பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாமை மாணவர்களிடையே விரக்தியை ஏற்படுத்துகிறது. தற்போதைய பொருளாதாரச் சூழலில் சரிவிகித உணவு கிடைக்காததால், மாணவர்கள் உடல் ரீதியாகப் பலவீனமடைந்து பாடசாலைக்குச் செல்வதைத் தவிர்க்கின்றனர்.

இந்தநிலையில் தற்போதைய அரசாங்கம் அறிமுகப் படுத்தியுள்ள ‘தேசிய கல்வி கொள்கை கட்டமைப்பு 2023-2033’ மலையக மாணவர்களின் கல்விப் பிரச்சினைகளுக்குச் சில தீர்வுகளை முன்வைக்கின்ற போதிலும் தேசிய ரீதியில் விமர்சனத்தையும் எதிர் கொண்டுள்ளது. புதிய சீர்திருத்தங்களின்படி, மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான பாடங்களைத் தெரிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது பாடத்திட்டத்தின் சுமையைக் குறைத்து, மாணவர்கள் இடைவிலகுவதைத் தடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலைப் பருவத்திலேயே தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதன் மூலம், கல்வியைப் பாதியில் நிறுத்தும் மாணவர்கள் குறைந்தபட்சம் ஒரு தொழில் தகுதியையாவது பெறுவதை அரசு உறுதி செய்கிறது. இது மலையக இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும். வகுப்பறைக்கு 25-30 மாணவர்கள் என்ற வரம்பு மற்றும் செயற்பாடு சார்ந்த கற்றல் முறைகள் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமையும்.

பௌதிகக் கட்டடங்கள் சேதமடைந்தாலும் கற்றல் செயற்பாட்டை தடையின்றித் தொடர, டிஜிட்டல் தொழில்நுட்பத்தை மலையகப் பாடசாலைகளுக்கும் விரிவுபடுத்த புதிய கொள்கை முன்னுரிமை அளிக்கிறது. எவ்வாறாயினும் குறைந்த மாணவர் எண்ணிக்கையை கொண்ட பாடசாலைகளை மூடும் அல்லது ஒன்றாக்கும் திட்டம் மலையகப் பெருந்தோட்ட பகுதிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சமூக பொருளாதார சூழல் காரணமாக தங்களின் அருகில் உள்ள பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க

தொடர்ச்சி: பக்கம் 13

# இலங்கை அரசமைப்பு மறுவுருவாக்கத்தில் இந்திய ஒன்றியம்

பேராசிரியர் முனைவர்
**ஆ. குழந்தை**
சென்னை

இலங்கையின் அதிபர் அநுராதனிப்பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தபிறகு இலங்கை நாட்டின் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவர முனைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் அவர்களும், இலங்கை பயிரிடுதல், குழுக்கட்டமைப்புக்கான துணை அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் அவர்களும் சென்னையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களைச் சந்தித்தனர். பல்வேறு தமிழ்த் தரப்பினரிடம் கருத்துகளைக் கேட்டு அதன்பிறகு இலங்கை அரசமைப்பு திருத்தத்தில் இந்திய ஒன்றியத்தின் பங்கு இன்றியமையாதது என்று இந்திய ஒன்றிய தலைமை அமைச்சர் மோடிக்கு கடிதம் எழுதுகிறார். 1987 ஆம் ஆண்டு இலங்கையில் நீதி அமைதி நிலவ இந்திய ஒன்றியத்தின் பங்கு மிக முக்கியமானது என்று இரு நாடுகளும் ஒத்துக்கொண்டதை தனது கடிதத்தில் சுட்டிக்காட்டி எழுதினார்.




இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து (1948 பிப்ரவரி 4) கடந்த 78 ஆண்டுகளாக சிங்கள பேரினவாத அரசு திட்டமிட்டு பாகுபடுத்தப்படுத்தி, அடக்கி ஒடுக்கி, வன்முறையை கட்டவிழ்த்துவிட்டு, உரிமைகளை பறித்து ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்தது. இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு உருவாக்கப்பட்ட அரசமைப்புகள்(1947, 1972, 1978, 2019) ஒற்றையாட்சியை வளர்த்து பாதுகாக்க உதவின. இந்த ஒற்றையாட்சியால் திட்டமிட்ட இனப்படுகொலை நடந்தது. ஈழத்தமிழ் மக்களுடைய நிலங்கள், பண்பாட்டுக் கூறுகள், உரிமைகள், வரலாறுகள் பறிக்கப்பட்டன. ஈழத்தமிழர்களும், மலையகத் தமிழர்களும் உரிமையற்றவர்களாக மாற்றப்பட்டனர். அதனால் ஒற்றையாட்சி உருவாக்கப்படக் கூடாதென தமிழ்நாட்டு முதல்வர் பரிந்துரையை முன்வைக்கிறார்.

தனது பரிந்துரையில் இந்திய ஒன்றிய அரசால் 1985 ஆம் ஆண்டு பூட்டானில் உள்ள திம்புவில் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப் பேச்சுவார்த்தையில் தமிழ்ப் பிரதிநிதிகள் முன்வைத்த திம்பு கோட்பாடுகளை சுட்டிக்காட்டுகிறார்.

- தமிழ்த் தேசியம்: ஈழத்தமிழர்கள் தனித்து வாழ ஒரு தனித்துவமிக்க நாடு, பண்பாடு, வரலாறு. மரபு முதலியவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும்.
- தமிழர் தாயகம்: வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமிழரின் தாயகமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- தன்னாட்சி உரிமை:தமிழரின்தாயகத்திற்குதன்னாட்சி உரிமையை வழங்கி உறுதிபடுத்தவேண்டும்
- குடியுரிமை: மலையகத் தமிழ் மக்களுக்கு முழு குடியுரிமை வழங்கவேண்டும்
- கூட்டாட்சிதன்மை: அனைத்து இனக்குழுக்களும் சமத்துவத்திலும், பாகுபாடியின்மையிலும் வாழ உறுதிசெய்யும் ஆட்சி வேண்டும்.

ஒற்றையாட்சிக்கு எதிராக கூட்டாட்சியைக் கொண்டு வந்ததால்தான் மக்கள் உரிமையோடு வாழ முடியும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரம் பரவலாக்கம் செய்யப்படவேண்டும். நாட்டின் சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்கவேண்டும். பன்முகத்தன்மையோடு சமத்துவக் கோட்பாடுகளை நிலைநிறுத்தவேண்டும். அவ்வாறு நிலைநிறுத்தும்போது கூட்டாட்சி முறை உருவாகும். இந்தக் கூட்டாட்சி முறைக்கு இந்திய ஒன்றியம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு முதல்வர் பரிந்துரைக்கின்றார்.

ஒன்றும் நடக்காத நிலையில் இந்தக் கூட்டாட்சி முறையை வலியுறுத்துவது நன்றாக இருந்தாலும் மலையகத் தமிழருக்கும் ஈழத்தமிழருக்கும் நடந்த இனப்படுகொலைக்கு என்ன நீதி? ஓர் இனப்படுகொலையை மூடிமறைப்பதாக இந்தப் பரிந்துரை அமைந்துள்ளது. இனப்படுகொலை நடந்ததற்கான ஆதாரங்கள் இருந்தும் உரிய இடத்தில் சேர்த்து உரிய நயன்மையை பெற முடியாமல் போனது தமிழர்களின் பிரிவினையும், உலக நாடுகளின் கூட்டுச் சதியும் காரணங்களாகும். சிங்கள பேரினவாதத்தின் சர்வாதிகார போக்கும் இதற்கு காரணமாகும். கூட்டாட்சி முறைவேண்டுமா? என்று ஒரு பொது வாக்கெடுப்பு தேவையாக உள்ளது. ஐக்கிய நாடுகள் வழங்கும் தன்னாட்சி உரிமையை நிலைநிறுத்த அரசமைப்பை மாற்றம் செய்ய வேண்டும்.




தமிழர் அரசியல் கட்சிகள் அரசியல் பிழைப்பு நடத்துவதாலும், புலம்பெயர்ந்த தமிழர்கள் விடுதலைப் போராட்டத்தை சடங்குகளாக மாற்றி செயல்படுவதாலும், உலக நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்காமலிருப்பதாலும் நமது நீதியை நாம் பெற முடியவில்லை. நமது பிரிவினையும், மோதல்களும் எதிரிக்கு பலமாக மாறிவிட்டது. அதனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் உள்ளதால் எந்தச் சட்டத்தையும் திருத்தத்தையும் எளிதாக கொண்டுவரமுடியும். அதற்கு பன்னாட்டு அழுத்தம் இருந்தால்தான் தமிழரின் உரிமையை நிலைநாட்ட முடியும். அதற்காக புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் உலக நாடுகளைச் சந்தித்து அழுத்தம் கொடுக்கவேண்டும். தமிழ்நாட்டு அரசு இந்திய ஒன்றிய அரசுக்கு பரிந்துரைப்பதுபோல உலக நாடுகளுக்கு தமிழர்களின் விருப்பத்தை அல்லது முடிவை அல்லது எதிர்பார்ப்பை தெளிவாக முன்வைத்து அழுத்தம் கொடுக்கவேண்டும்.

உலகில் வாழும் அனைத்து தமிழர் அமைப்புகள் ஒன்றுகூடி ஒற்றை இலக்கோடு உலக நாடுகளுக்கும், இலங்கைக்கும், தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அழுத்தம் கொடுக்கவேண்டும். இதற்காக நாம் எல்லோரும் ஒன்றுசேர நல்ல வாய்ப்பாக இருக்கிறது. இதுவரை தனித்தனியாக செயல்பட்டது போதும். இனிமேலாவது ஒன்றுகூடி இந்திய ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இந்திய ஒன்றியம் இலங்கை அரசமைப்புத் திருத்தத்தில் ஈடுபடவேண்டும். இதில் தமிழர்களின் அழுத்தமும், உலக நாடுகளின் ஈடுபாடும் மிக முக்கியமானவை. இந்தச் சீர்திருத்தம் தமிழர்களின் தலையெழுத்தையே மாற்றிவிடும். அதற்கு பிறகு நாம் உரிமையைப்பற்றியோ இனப்படுகொலையைப்பற்றியோ உலகின் எப்பகுதியிலும் பதிவு செய்ய முடியாது. தமிழர்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும். தமிழ்நாட்டு அரசு ஒரு பரிந்துரையை வைத்தாலும் தமிழர்களாகி நாம் நமது பரிந்துரையை தெளிவாக திட்டமிட்டு, கூட்டாக சேர்ந்து முன்வைப்பது நமது கடமையாகும்.

உலகில் வாழும் அரசியல் தமிழ் அறிஞர்களும் பிறநாட்டு அரசியல் அறிஞர்களும் இணைந்து தன்னாட்சி உரிமையை நிலைநிறுத்த எவ்வழிகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை நன்கு ஆய்வுசெய்து இலங்கை அரசுக்கும், உலக அரசுகளுக்கும் கொடுத்து. அழுத்தம் தரவேண்டும். தன்னாட்சி உரிமைக்கு இனப்படுகொலையை காரணமாக முன்வைக்கவேண்டும். தமிழ்நாட்டு முதல்வர் இந்திய ஒன்றிய அரசுக்கு முன்வைத்த பரிந்துரையையும் கணக்கில் எடுத்து, மறுவாசிப்பு செய்து, நமது எதிர்பார்ப்பை முன்னிறுத்தவேண்டும். இனப்படுகொலையினால் தனிநாடும், தன்னாட்சியும் தன்னுரிமையும் வேண்டு மென்று அறைகூவல் விடுக்கின்றோம் என்று தெளிவுபட உரைக்க வேண்டும்.

• • •

## ஈரான் மீதான ... தொடர்ச்சி...

நலன்களைத் தாக்க வேண் டாம் என்று ஈரானிடம் கேட்டுக் கொண்டதையும் குறிக்கிறது.

ஈரானில் உள்ள மக்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்க சட்டப்பூர்வமான உரிமை இருப்பதாகவும், அரசாங்கம் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகவும் ஆனால் ஈரானில் ஆயுதமேந்திய குழுக்கள் கொலைகளை நடத்தியதோடு மசூதிகளையும் தாக்கியதாகவும் தூதர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அடக்குமுறையால் பலர் கொல்லப்பட்ட பின்னர் போராட்டங்கள் தணிந்துள்ளதாக தெஹ்ரானில் வசிக்கும் ஒருவர் தெரிவித்துள்ளார். “கடந்த இரண்டு அல்லது மூன்று நாட்களில் ஏராளமானோர் கொல்லப்பட்டதால் போராட்டங்கள் அமைதியடைந்துள்ளன. அதனால்தான் மக்கள் வெளியே செல்லவில்லை,” என்று பெயர் வெளியிட விரும்பாத குடியிருப்பாளர் கூறினார்.

ஈரான் அதிகாரப்பூர்வ இறப்பு எண்ணிக்கையை வெளியிடவில்லை. பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர். இருப்பினும், கொல்லப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதாகவும், அதில் 1,000க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்களும் அடங்குவர் என்றும் எதிர்க்கட்சி ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

## நான்கு ஆண்டுகளில் ... தொடர்ச்சி...

ஜூலி சங் தடுத்தமை, இலங்கையின் பொருளாதார சுதந்திரத்தில் அமெரிக்கா நேரடியாக தலையீடு செய்வதாக விமர்சிக்கப்பட்டது.

அமெரிக்கத் தூதரகத்தில் ‘Pride Flag’ ஏற்றியமை மற்றும் தன்பாலின ஈர்ப்பாளர்களின் உரிமை களுக்காக அவர் முன்நின்றமை, நாட்டின் சமூகக் கட்ட மைப்பில் பெரும் விவாதங்களை உருவாக்கியது.

அதேபோன்று தான் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் மற்றும் தமக்கு சார்ந்த சிவில் அமைப்பின் பிரதிநிதிகளுடன் அவர் கொண்டிருந்த உறவு என்பது தனது தேவைக்கு பயன்படுத்தக்கூடிய ‘கறிவேப்பிலை;’ போன்றதொன்றாகவே காணப்பட்டதே தவிர நீதி, நியாயம், பொறுப்புக்கூறலுக்காக அர்ப்பணிக்கப்பட்டதொன்று அல்ல என்பது வெளிப்படையானது.

இதேநேரம்ட, ஜூலி சங் விடைபெறும் காலத்தில் மிகுந்த கசப்பான அனுபவத்துடன் வெளியேற வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஹவாய் தீவில் ‘இந்தோ-பசிபிக்’ பிராந்திய அமெரிக்கத் தூதுவர்களின் மாநாடு இடம்பெறுவதற்குரிய ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

குறித்த மாநாட்டில் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளின் அனைத்து அமெரிக்கத் தூதுவர்களும், அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகளும் மற்றும் அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும் கலந்துகொள்வது வழக்கம்.

ஒவ்வொரு தூதுவர்களும் தாம் கடமையாற்றும் நாட்டில் காணப்படுகின்ற சமகால நிலைமைகள் குறித்த துல்லியமான தகவல்களை குறித்த மாநாட்டில் சமர்ப்பித்து, அந்த நாடு தொடர்பாக அமெரிக்கா அடுத்துவரும் காலங்களில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்த புதிய மூலோபாய உத்திகளை வகுப்பதே நோக்கமாகும்.

அதற்கமைய, தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் ஒருவித வினைத்திறனற்ற தன்மை காணப்படுவதையும், 2026இன் ஏப்ரல் - மே காலப்பகுதியில் இலங்கையில் மீண்டுமொரு பொருளாதார நெருக்கடி உருவாவதற்கான அபாயம் உள்ளதாகவும், அதனுடன் இணைந்து அரசியல் நெருக்கடி ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் எதிர்வு கூறல்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்விதமானதொரு சூழ்நிலை ஏற்பட்டால் அமெரிக்கா எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து தெளிவுபடுத்துவதற்கு ஜூலி சங் திட்டமிட்டு ஏற்பாடுகளையும் முனைப்புடன் முன்னெடுத்து வந்திருந்தார்.

ஆனால், கடந்த வாரம் ஜூலி சங் வொஷிங்டனுக்கு சென்றபோது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஹவாயில் நடைபெறவிருந்த வருடாந்த மாநாட்டை இரத்துச் செய்வதாக அறிவித்ததோடு சேவை நீடிப்பில் உள்ள ஜூலி சங் உட்பட 30அமெரிக்கத் தூதுவர்களையும், அதிகாரிகளையும் மீள அழைத்துவிட்டார்.

இதனால் ஜூலி சங் தனது எதிர்வுகூறல்களை மேற்கொள்வதற்கான தளம் தகர்க்கப்பட்டு விட்டது. அதுமட்டுமன்றி அவரது கணிப்புக்கள் கவனத்தில் கொள்ளப்படுமா என்பதும் கேள்விக்குறியாகியுள்ளது.

எவ்வாறாயினும், ஜூலி சங் இலங்கையில் பணியாற்றிய 28 அமெரிக்கத் தூதுவர்களில் அனைத்து மட்டங்களிலும் அதிக செல்வாக்கு மிக்கவராக கருதப்படுகின்றார்.

சீன சார்பு, இடதுசாரித்து சிந்தனையாளர்களான ஜே.வி.பியின் தலைமையகத்திற்கே சென்று அவர்களை தம்வசப்படுத்தியமை முதல், அவருடைய தொடர்ச்சியான செயற்பாடுகள் தற்போதைய இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுவை ‘அமெரிக்க மையவாதம்’ புதிய நிலைக்கு கொண்டு சென்றிருக்கின்றது.

• • •

# ட்ரம்ப் கிறீன்லாந்து பற்றி பொய் சொல்லவில்லை, அதற்கான காரணம் இங்கே

மொழியாக்கம்: ஆர்தீகன்



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், கிரீன்லாந்தை கையகப்படுத்தும் திட்டத்திற்கு திரும்பியபோது - ஒரு மாதத்திற்கு முன்பு பெரும்பாலும் மறந்துவிட்டதாகத் தோன்றிய ஒன்று - அந்தக் கருத்து வெறும் ‘நாடகக் கலை’ என்று கருதப்படவில்லை, குறிப்பாக ஐரோப்பாவில். மேலும் இது ‘மதுரோ விளைவு’ பற்றியது மட்டுமல்ல. டிரம்பின் ஆத்திரமூட்டும் அறிக்கைகளின் கீழ், ஒரு தெளிவான புவிசார் அரசியல் உத்தி உருவாகி வருகிறது, அதை ‘புதிய உலகமயமாக்கல்’ என்று அழைக்கலாம். இந்த அணுகுமுறையில் உலகமயமாக்கல் என்ற கருத்தை விட, அமெரிக்காவை மையமாகக் கொண்ட உலகமயமாக்கலை விடவும் மிகவும் பொருளாதார ரீதியாக அடித்தளமாக உள்ளது.



டிரம்பின் ‘புதிய உலகமயமாக்கல்’ மூன்று தர்க்க ரீதியாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கூறுகளைக் கொண்டுள்ளது:

- மன்ரோ கோட்பாட்டை மறுபரிசீலனை செய்தல் (டிரம்ப் பிலிப்பைன்ஸையும் இந்த ‘கிரேட்டர் அமெரிக்காவின்’ ஒரு பகுதியாகக் கருதுகிறாரா என்று ஒருவர் யோசிக்கலாம்.)
- ஹைட்ரோகார்பன் சந்தையில், குறிப்பாக பிராந்திய வர்த்தகத்தில், தனக்கே உரித்தான விதிகளை ஏகபோகமாகக் கொண்ட ஒரு எரிசக்தி வல்லரசாக அமெரிக்காவை மாற்றுதல்
- ஆர்க்டிக் வல்லரசாக அமெரிக்காவின் நிலையை மேம்படுத்துதல் - அமெரிக்கா தற்போது பெயரளவில் மட்டுமே உள்ளது.

டிரம்பின் நடவடிக்கைகள் மிகவும் தர்க்கரீதியானவை: நிக்கோலஸ் மதுரோவின் ஆட்சியை அகற்றிய நடவடிக்கை லத்தீன் அமெரிக்காவின் வளங்களை அமெரிக்காவிற்கு குறுகிய கால பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு ஆதாரமாக மாற்றுவதற்கு மிக முக்கியமானது. இது ‘புதிய உலகமயமாக்கல்’ உலகில் டிரம்பின் ‘நுழைவுச் சீட்டு’ ஆகும். வெனிசுலாவின் (மற்றும் இறுதியில் பிரேசில் மற்றும் ஈரானின்) எண்ணெய் வளங்கள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்காவிட்டால் மற்றும் ‘நிழல் கடற்படைகளை’ விரைவில் நீக்காவிட்டால் அமெரிக்கா ஒரு எரிசக்தி வல்லரசாக மாற முடியாது., கிரீன்லாந்தின் மீது முழு சட்டப்பூர்வ கட்டுப்பாட்டை அடைவது அமெரிக்காவை ஒரு ஆர்க்டிக் சக்தியாக நிறுவுவதற்கு அவசியம். இல்லையெனில், 2030 க்குப் பிறகு அமெரிக்கா ஒரு ஆற்றல் மிக்க வல்லரசாக தனது போட்டித்தன்மையை பராமரிப்பது கடினமாக இருக்கும்.

நிச்சயமாக, ஒரு பரிணாமப் பாதையில் அலாஸ்காவை மீண்டும் உயிர்ப்பிக்க ஒரு விலையுயர்ந்த மற்றும் நீடித்த திட்டத்தில் முதலீடு செய்வது அடங்கும். இருப்பினும், அதற்கு பல தசாப்தங்கள் தேவையில்லை என்றாலும் பல ஆண்டுகள் ஆகும். அதற்கு பதிலாக, கிரீன்லாந்து ஒரு புதிய அரசியல் மற்றும் புவியியல் நிலையை விரைவாக உறுதிப்படுத்த ஒரு வாய்ப்பை வழங்குகிறது.




டிரம்ப் ஒரு திட்டத்துடன் தான் செயற்படுகின்றார். தனதுபுவிசார்அரசியல்போட்டியாளர்களின்பலவீனங்களின் அடிப்படையில் தனது அடுத்த நடவடிக்கைகளைத் தேர்வு செய்கிறார். 2025 வசந்த காலத்தில் அவர் பின்வாங்க வேண்டியிருந்ததை விட முற்றிலும் மாறுபட்ட மட்டத்தில் கிரீன்லாந்தின் நிலை குறித்த விவாதங்களில் ஈடுபட முடியாத அளவுக்கு ஐரோப்பா பலவீனமடைந்துள்ளதாக அவர் நம்புகிறார். உற்பத்தியாளர்களுடன் நடைபெற்ற சமீபத்திய உரையாடலில் டிரம்ப் இதைப் பற்றி பேசினார். “அவர்களின் பாதுகாப்பு என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? இரண்டு நாய் கூடுகள் தான் கிறீன்லாந்தின் பாதுகாப்பு,” என்று அவர் கூறினார், அமெரிக்கா கிரீன்லாந்து அல்லது டென்மார்க்கிற்கு ஒரு அரசியல் திட்டத்தை முன்வைத்ததா என்ற கேள்விக்கு பதிலளித்தார். அதே நேரத்தில், ரஷ்ய மற்றும் சீன நாசகார கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் “எல்லா இடங்களிலும் உள்ளன” என்று அவர் மேலும் கூறினார்.

கிரீன்லாந்தைப் பற்றி விவாதிக்கும்போது, டிரம்ப், நேட்டோவால் தீவை வெளிப்புற அச்சுறுத்தல்களிலிருந்து, ஜோடிக்கப்பட்ட அச்சுறுத்தல்களிலிருந்து கூட (ரஷ்யாவும் சீனாவும் அந்தப் பகுதியைக் கைப்பற்றும் வாய்ப்பு போன்றவை) பாதுகாக்க இயலாது உள்ளதையும் நேரடியாக எடுத்துக்காட்டினார் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். டிரம்பின் செய்தி தெளிவாக உள்ளது: பாதுகாப்பில்லாத எந்தவொரு ‘சொத்துக்களையும்’ மீட்டெடுக்க அவர் விரும்புகிறார்.

கிரீன்லாந்தை கையகப்படுத்தும் யோசனையில் டிரம்பின் வெறித்தனம் என்பது, ஐரோப்பியத் தலைவர்கள் ஐரோப்பாவின் பாதுகாப்பிற்கு முழுப் பொறுப்பையும் ஏற்கத் தயாராக இருப்பதாகக் கூறினாலும், அவர்கள் இன்னும் மிதமான அளவிலான ‘விருப்பமுள்ளவர்களின் கூட்டணியை’ உருவாக்கத் தவறியதிலிருந்து தோன்றியது. ஐரோப்பாவின் 200,000 துருப்புக்களைக் கொண்ட முன்மொழியப்பட்ட படை ஆறு மாதங்களில் வெறும் 40,000 ஆகக் குறைந்தது - மேலும் ஐரோப்பியர்கள் அத்தகைய இராணுவப் படையைச் சேகரிக்க முடியும் என்பது சாத்தியமில்லை, இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் பிரான்சின் எந்தவொரு கூட்டு முயற்சிகளும் டிரம்பை ஈர்க்க வாய்ப்பில்லை.



தங்கள் சொந்த இராணுவ பலவீனத்தை உணர்ந்துகொள்வது ஐரோப்பியர்களை ஆழமாக அமைதியின்மையடையச் செய்கிறது. ஐரோப்பாவின் முக்கிய நாடுகள் கிரீன்லாந்தை தியாகம் செய்யத் தயாராக இருக்கலாம். இருப்பினும், டிரம்ப் வெற்றி பெற்றால், இந்த நாடுகள் அடிப்படையில் அவரது ‘வளமாக’ மாறும், ஒரு காலத்தில் ‘சமமான ஜனநாயகங்களின் ஒன்றியம்’ என்று கருதப்பட்ட நேட்டோவிற்குள்ளேயே கூட தங்கள் அரசியல் குரலை இழக்கும். மேலும், கிரீன்லாந்து தொடர்பான நடவடிக்கை நடந்தால், டிரம்பிற்கும் கனடாவிற்கும் இடையில் எதுவும் நிற்காது.




ஐரோப்பா அமெரிக்காவின் ‘புதிய உலகமயமாக்கலை’ எவ்வாறு எதிர்கொள்ள முடியும்? மேலே குறிப்பிட்டுள்ளபடி, உள்நாட்டு பொதுக் கருத்தை வடிவமைப்பதை நோக்கமாகக் கொண்ட ஐரோப்பிய அரசியல்வாதிகளின் சொல்லாட்சியில் மட்டுமே இராணுவ விருப்பங்கள் உள்ளன. இருப்பினும், பிரிட்டிஷ் ஊடகங்களில் இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மரின் விமர்சனம் இந்த உத்தி தடுமாறி வருவதைக் குறிக்கிறது. அரசியல் முறைகளே ஐரோப்பாவின் ஒரே வழியாக உள்ளன. ஆனால் அங்கும், விருப்பங்கள் குறைவாகவே உள்ளன.

யூரோ-அட்லாண்டிக் ஒற்றுமை மற்றும் டிரம்பை ‘விஞ்சும்’ திறன் (உக்ரைனுடனான சூழ்நிலையில் நாம் பார்த்தது போல்) மீது அதிக நம்பிக்கைகள் வைக்கப்பட்டன, எடுத்துக்காட்டாக நேட்டோவின் ஆலோசனை வழிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம். இருப்பினும், எந்தவொரு சட்ட கட்டமைப்புகளுக்கும் வெளியே, ஒருதலைப்பட்சமாக முடிவுகளை எடுப்பேன் என்று டிரம்ப் தெளிவுபடுத்தியுள்ளார். இருப்பினும், ஐரோப்பிய தலைவர்கள் நேட்டோவின் ஐந்தாவது பிரிவை நாடலாம். அவர்கள் அத்தகைய நடவடிக்கையை எடுத்தால், அது நேட்டோ கூட்டணியின் முடிவின் தொடக்கத்தைக் குறிக்கலாம். கிரீன்லாந்தைச் சுற்றியுள்ள விவாதம் - அடிப்படையில் நேட்டோவின் உறுப்பு நாடுகளில் ஒன்றின், குறிப்பாக அதன் நிறுவன நாடுகளில் ஒன்றின் பிராந்திய ஒருமைப்பாடு பற்றியது - அடிப்படையில் நேட்டோவின் முக்கிய கொள்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்: வெளிப்புற அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்யும் அதே வேளையில் முகாமின் உள் புவிசார் அரசியல் ஒருமைப்பாட்டைப் பராமரித்தல் மற்றும் அனைத்து உள் அபாயங்களையும் நீக்குதல் என்பன முக்கிய நெருக்கடியாக மாறும்.

கிரீன்லாந்தின் அந்தஸ்தைப் பொறுத்தவரை, தீவின் மீது ஒரு அமெரிக்க இராணுவ மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பை நிறுவுதல் போன்ற ஒரு வகையான ‘நடுத்தர நடவடிக்கையை’ நோக்கி டிரம்பை அழுத்துவது மிகவும் செயற்றிறன்மிக்க அணுகுமுறையில் அடங்கும். டிரம்ப்

தொடர்ச்சி: பக்கம் 13



# ஈரானை எப்படி வீழ்த்த முடியும்?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

ஈரான் மீதான தாக்குதலை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இறுதி நேரத்தில் ரத்து செய்திருந்தார், ஏனென்றால் இஸ்ரேலின் மற்றும் மேற்குலக நாடுகளின் உளவு அமைப்புக்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கிளர்ச்சியை ஈரான் எதிர்பார்த்ததை விட சிறப்பாகக் கையாண்டுள்ளது. இது குடியரசின் முடிவு என்று இஸ்ரேல் 100% நினைத்தது. அவர்கள் பல்லாயிரக்கணக்கான மொசாட் இரட்டை முகவர்கள் மற்றும் ஆயுதங்கள், தொழில்நுட்பத்தால் ஈரானை ஆக்கிரமித்திருந்தனர். ஈரானுக்குள் 40,000 ஸ்ரார் லிங் செயற்கைக்கோள் இணையத்தள உபகரணங்க ளும் கொண்டுசெல்லப்பட்டிருந்தன. அதற்காக அவர்கள் தமது வளங்கள் அனைத்தையும் செயல்படுத்தினர். ஆனால் ஈரான் அவர்களைத் தடுப்பதற்கு மட்டுமல்லாமல், அவர்களை அடையாளம் கண்டு அவர்களின் முழு நெட்வொர்க்குகளையும் விரைவாக மூடுவதற்கு ஒரு வழியைக் கண்டு பிடித்திருந்தது.



ஈரானின் இந்த வெற்றி இஸ்ரேலுக்கு பேரழிவு தரும். ஈரான் அதனைச் செய்யும் என அவர்கள் நினைக்கவில்லை. ஈரான் தங்கள் நாட்டிற்குள் இருந்த பல முக்கியமான இஸ்ரேலிய சொத்துக்களை அழித்த பிறகு இஸ்ரேல் முழு பீதியில் இருப்பதாக முன்னாள் ஐ.நா. ஆயுத ஆய்வாளர் கூறுகிறார். ஈரான் தங்கள் எல்லைக்குள் செயல்படும் மொசாட் ஊடுருவல்காரர்களை பிடித்து தூக்கிலிட்டதாக அவர் கூறுகிறார். அவரைப் பொறுத்தவரை, இஸ்ரேலின் கடைசி நம்பிக்கை ஜனாதிபதி டிரம்பை நேரடி தாக்குதலை நடத்த அழுத்தம் கொடுப்பதாகும், அதை ட்றம்ப் தற்போது தாமதப்படுத்தி வருகிறார். இது இஸ்ரேலின் முக்கிய நடவடிக்கையாக கருதப்பட்டது, ஆனால் அது வியக்கத்தக்க வகையில் தோல்வியடைந்துள்ளது.




ஜனவரி 8, ஈரானில் தாக்குதலுக்குத் தயாராகும் உயர் பயிற்சி பெற்ற தனிநபர்கள் குழு (பெரும்பாலும் மொசாட்) ஆயுதங்களை ஏற்றுவது, ஆடைகளுக்குள் துப்பாக்கிகளை மறைப்பது மற்றும் வெளிநாட்டு உளவுத்துறை நிறுவனங்களுடன் தொடர்புடையதாக நம்பப்படும் செயற்கைக்கோள் தகவல்தொடர்புகளைப் பயன்படுத்துவது போன்ற காட்சிகளை ஈரான் வெளியிட்டுள்ளது. அதனை அவர்கள் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களுக்கும் காண்பித்துள்ளனர். அதாவது இது அமெரிக்காவும், மேற்குலக ஊடகங்களும் கூறுவதுபோல அமைதியா ஜனநாயகப் போராட்டம் அல்ல, இது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வெளிநாட்டு உளவு அமைப்புக்களால் வடிவமைக்கப்பட்ட போராட்டம் என ஈரான் தெரிவித்துள்ளது.

இந்த போரட்டத்தை ஈரான் வெற்றிகரமாக முறியடித்ததைத் தொடர்ந்து அரபு நாடுகள் மற்றும் இஸ்ரேலின் வேண்டுகோளின் பேரில், ஈரானை தாக்கும் திட்டங்களை காலவரையின்றி ஒத்திவைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இந்த பின்வாங்கலுக்கு 3 முக்கிய காரணிகள் உள்ளன.



ஒன்று இஸ்ரேல் மற்றும் வளகுடாவில் உள்ள அமெரிக்க தளங்களை நோக்கி பறக்கும் ஈரானின் ஏவுகணைகளை தடுப்பதற்கு இஸ்ரேலிடமும், அமெரிக்காவிடமும் முற்றான பாதுகாப்பு பொறிமுறைகள் இல்லை. அது கடந்த வருடம் இடம்பெற்ற 12 நாள் போரில் தெளிவாக உணரப்பட்டிருந்தது.

ஐ.ஆர்.ஜி.சி எட்டு இஸ்ரேலிய விமானத் தளங்கள் மற்றும் இராணுவத் தளங்களை நேரடியான இலக்காகக் கொண்ட ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை நிலை நிறுத்தக்கூடும் என்று ஈரானிய உளவுத்துறையின் அறிக்கைகள் கூறுகின்றன. ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளின் பெருமளவிலான பயன்பாடு இஸ்ரேலுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் வேகம் மற்றும் அதன் பாதை காரணமாக அவற்றை இடைமறிப்பது கடினம்.

இரண்டாவது ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும், இதனால் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு பெரும் இழப்பு ஏற்படும். ஒபேக் நாடுகளின் 72% எரிபொருட்கள் இந்த வழியால் தான் செல்கின்றன. அதாவது நாள் ஒன்றிற்கு 20 மில்லியன் பரல்கள் எண்ணை இந்த வழியால் செல்கின்றது. உலகின் கடல் வழியிலான எரிபொருள் வர்த்தகத்தில் இரு 25% ஆகும். கடந்த வருடம் இடம்பெற்ற 12 நாள் போரில் ஈரான் அதனை மூடவில்லை ஆனால் இந்த முறை அதனை அவர்கள் மூடலாம்.



மூன்றாவது பிராந்தியத்தில் அரபு நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்களின் பயன்பாடும், ஆயுதங்களும் போதுமானதாக இல்லை. கட்டார், சவுதி மற்றும் ஈராக் போன்ற நாடுகள் தமது நாடுகளை தாக்குதலுக்கு பயன்படுத்த மறுப்பும் தெரிவித்திருந்தன. அதாவது ஈரான் குறிப்பிடத்தக்க அளவில் பலம் பொருந்திய நாடு..12 நாள் போரில், ஈரானிய கடற்படை மோதலில் இருந்து விலகி இருந்தது, ஆனால் இன்று, தாக்குதல் ஆட்சி மாற்றத்தை இலக்காகக் கொண்டதாக இருக்கும் என்பதை அறிந்த ஈரானியர்கள் தங்களிடம் உள்ள அனைத்தையும் பயன்படுத்துவார்கள்.



அந்த 12 நாட்களில் அவர்கள் நடைமுறையில் தங்கள் ஆயுதக் களஞ்சியத்தில் உள்ளவற்றில் அதிகமாக எதையும் இழக்கவில்லை; நீண்ட தூர ஆயுதங்கள் கூட அழிக்கப்படவில்லை. விமானம் முதல் நீண்ட தூர பேட்டரிகள் வரை அனைத்தையும் அவர்கள் மறைத்து வைத்திருந்தனர். போரின் பின்னர் அவர்கள் தாம் பயன்படுத்தியதற்கு மேலதிகமாக தயாரித்தும் உள்ளனர். எனவே அவர்கள் தங்களிடம் உள்ள அனைத்தையும் கொண்டு போராடுவார்கள்.



அவர்களிடம் மூன்று முதன்மையான கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் உள்ளன: அபு மஹ்தி, தலாய்யே மற்றும் காதர்-380 (காதர்-380). மூன்றும் 1,000–1,700 கிமீ தூர வீச்சைக் கொண்டவை. அது ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதற்கு மட்டுமல்ல, ஏடன் வளைகுடாவிலும் அரேபிய கடலின் ஒரு பகுதியிலும் தாக்குதல் நடத்த போதுமானது, அவ்வாறு நடந்தால் சந்தைகளில் குழப்பத்தை ஏற்படுத்தி, முக்கிய உலகளாவிய வர்த்தக பாதையை ஆபத்தில் தள்ளும். ஈரான் போன்ற நன்கு ஆயுத பலம் கொண்ட 90 மில்லியன் மக்கள் வசிக்கும் ஒரு நாடு, வெளிப்புற முகவர்கள் ஒரே இரவில் தாக்கி அதன் அரசாங்கத்தை மாற்ற முடிவு செய்யக்கூடிய ஒன்றல்ல. 50 ஆண்டுகளுக்கும் மேலாக, CIA மற்றும் மொசாட் ஆகியவை ஈரானிய அரசாங்கத்தை வீழ்த்த முயற்சித்தும் வெற்றி பெறவில்லை. மேற்குலகத்தின் பொருளாதார அழுத்தங்களால் இப்போது ஆட்சி ஒரு பலவீனமான மற்றும், மக்கள் அழுத்தத்தின் கீழ் உள்ளது. ஆனால் நாம் ஈரானைப் பற்றி பேசும்போது, அதற்கான சீன மற்றும் ரஸ்ய உதவிகளை மறக்க முடியாது.

அதாவது தற்போதைய ஆட்சி மாற்ற நடவடிக்கை அதிகாரப்பூர்வமாக ஒரு தோல்வி. உண்மை என்ன வென்றால், பெரிய அளவிலான தாக்குதல் ஆட்சியை உயிர்வாழும் நிலைக்குத் தள்ளிவிடும், ஈரான் தான் தப்பிப் பிழைப்பதற்காக இஸ்ரேலைத் தாக்கும், அமெரிக்க தளங்களைத் தாக்கும், கப்பல் போக்குவரத்தை மூடும், உலகளாவிய சந்தைகளை நிறுத்தும். ஆனால் அமெரிக்காவும் இஸ்ரேலும் இந்த வாய்ப்பை அவ்வளவு எளிதில் கடந்து

தொடர்ச்சி: பக்கம் 12

## கிரீன்லாந்தை கையகப் ... தொடர்ச்சி...

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் சமீபத்தில் டென்மார்க்கின் ஒரு தன்னாட்சி பிரதேசமான கிரீன் லாந்தை அமெரிக்க கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான தனது முயற்சியை தீவிரப் படுத்தியுள்ளார், அதை “ஏதாவது ஒரு வழியில்” அல்லது பலவந்தமாக கையகப்படுத்த முற்பட்டுவருகின்றார்.

ரஷ்யாவும் சீனாவும் தீவை அச்சுறுத்தக்கூடும் என்றும், எனவே கிரீன்லாந்து தனது முன்மொழியப்பட்ட கோல்டன் டோம் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புக்கு இன்றியமையாதது, இரண்டு நாய்கள் அதைச் செய்யாது!” என்றும் டிரம்ப் கூறினார்.

கிரீன்லாந்தை வாங்குவதற்கான திட்டத்தை வரைவு செய்ய டிரம்ப் வெளியுறவுத்துறை செயலாளரான மார்கோ ரூபியோவுக்கு உத்தரவிட்டுள்ளார். கையகப்படுத் தல் திட்டங்களைத் தயாரிக்கும் ஆராய்ச்சியாளர்கள் $500 - $700 பில்லியன் செலவை மதிப்பிட்டுள்ளதாக கூறப்படுகி றது - இது போர்த் துறையின் ஆண்டு பட்ஜெட்டில் பாதிக் கும் மேலானது.

அமெரிக்கா தீவை வாங்குவதையோ அல்லது ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்வதையோ தொடர வாய்ப்புள் ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன - அதாவது ஒரு பெரிய இராணுவ இருப்புக்காக அமெரிக்க நிதி உதவியை வர்த்தகம் செய்யும் ஒரு சுதந்திர சங்க ஒப்பந்தம் போன்றவை. இருப்பினும்இ கிரீன்லாந்தை கையகப்படுத்த அமெரிக்கா இன்னும் பலத்தைப் பயன்படுத்துவதை பரி சீலிக்கலாம் என்று சிலர் எச்சரிக்கின்றனர்.

டென்மார்க் மற்றும் கிரீன்லாந்தில் உள்ள அதிகாரிகள் தீவு விற்பனைக்கு இல்லை என்று பல முறை கூறியுள்ளனர் மற்றும் டிரம்பின் நடைவடிக்கை டேனிஷ் இறையாண்மைக்கு நேரடி அச்சுறுத்தலாகக் கண்டித்துள்ள னர்.

டென்மார்க் வெளியுறவு அமைச்சர் லார்ஸ் லோக்கே ராஸ்முசென் மற்றும் கிரீன்லாந்து வெளியுறவு அமைச்சர் விவியன் மோட்ஸ்ஃபெல்ட் ஆகியோர் புதன்கிழமை(14) வாஷிங்டனுக்குச் சென்று டிரம்பின் நோக்கங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர். ரூபியோ மற்றும் துணைத் தலைவர் ஜே.டி. வான்ஸை சந்தித்த பிறகு, முக்கிய சர்ச்சை தீர்க்கப்படாமல் இருப்பதை ஒப்புக்கொண்டு, “கிரீன்லாந்தை கைப்பற்றும் விருப்பம் டிரம்பிற்கு உள்ளது என்பது தெளிவாகிறது” என்று அவர் தெரிவித்துள்ளனர்.

கிரீன்லாந்தை கையகப்படுத்த அமெரிக்கா 700 பில்லியன் டாலர்கள் வரை செலுத்த வேண்டியிருக்கும் என்று சாத்தியமான கையகப்படுத்துதலைத் திட்டமிடுவ தில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் மற்றும் முன்னாள் அதி காரிகளை மேற்கோள் காட்டி. புதன்கிழமை(14) NBC செய்தி வெளியிட்டுள்ளது.

• • •

## ஈழத்தமிழர்களை ... தொடர்ச்சி...

சார்பாகவே நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டு இன்றுவரை ஈழத் தமிழர்களின் மனங்களில் வேர் ஊன்றி உள்ளது.

2009 மே18 க்கு பின்னர் போர் முடிவுக்கு வந்த பிறகு, ஜெயலலிதா ஈழத்தமிழர் பிரச்சினையில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினார். ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக பல நடவடிக் கைகளை எடுத்ததுடன், மத்திய அரசையும், இலங்கை அரசையும் கடுமையாக விமர்சித்தார். அவரது இந்த நிலைப்பாடு, தமிழகத்திலும், உலகெங்கிலும் உள்ள ஈழத்தமிழர்களிடையே அவருக்கு ஆதரவைத் தேடித்தந்தது.

முதலமைச்சர் ஜெயலலிதா, இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை கோரி, தனி ஈழத்திற்கான பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும், இலங்கை அரசுக்கு பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்ற தீர்மானங்களை தமிழக சட்டமன்றத்தில் 2013 நவம்பர் 13 ல் கொண்டுவந்து நிறைவேற்றினார், அந்த தீர்மானம் 13 வருடங்களாக இன்று 2026 வரை நிலுவையில் உள்ளது. அதற்கு பின்னர் தமிழக முதலமைச்சர்களாக இருந்த ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிச் சாமி, தற்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அன்று 2013 ல் முதலமைச்சர் ஜெயலலிதா எடுத்த தீர்மானத்தை மீண்டும் வலியுறுத் தவில்லை. அதைப்பற்றி இதுவரை இவர்கள் எவருமே வாய்திறக்க கூட இல்லை.

அந்த தீர்மானத்தால் எதுவுமே நடக்கவில்லை , இப்போது முதலமைச்சர் ஷ்டாலின் அனுப்பிய கடிதத்தால் ஏதாவது நடக்கும் என யாராவது சிந்தித்தால் சிந்திப்பவர்கள் இந்திய அரசின் பூகோள அரசிலை அறியாதவர்கள் இருந்தால் ஆகப்போவது ஒன்றுமில்லை. இதுவும் கடந்துபோகும்.







## டாலரின் முக்கிய ... தொடர்ச்சி...

டாலரின் மீதான நம்பிக்கையையும் பரந்த மேற்கத்திய நிதி அமைப்பின் மீதான நம்பிக்கையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

டாலரிலிருந்து, அமெரிக்க கருவூலங்களிலிருந்து, அமெரிக்கா SWIFT போன்ற கருவிகளை, கையிருப்புகளை தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் பெருமளவில் விலகிச் செல்கிறது. 2022 ஆம் ஆண்டில் உக்ரைன் மோதல் அதிகரித்த பின்னர் ரஷ்யா மீது விதிக்கப்பட்ட பொரு ளாதாரத் தடைகளின் கீழ் மேற்கத்திய நாடுகளில் மத்திய வங்கி இருப்புகளில் சுமார் $300 பில்லியன் முடக்கப்பட்டது இத்தகைய துஷ்பிரயோகத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க சம்பவம் என்று அவர் Russia Today உடனான பிரத்யேக நேர்காணலில் கூறினார்.

சொத்து முடக்கத்திற்கு அப்பால், அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் SWIFT வங்கிகளுக்கு இடை யேயான செய்தியிடல் அமைப்பிலிருந்து பெரும்பாலான ரஷ்ய வங்கிகளை அகற்றி, முக்கிய நிதி நிறுவனங்களுக்கு முழு பரிவர்த்தனை தடைகளை விதித்தன, இதனால் ரஷ்யா டாலர் மற்றும் யூரோ ஆதிக்கம் செலுத்தும் மேற் கத்திய நிதி அமைப்பிலிருந்து துண்டிக்கப்பட்டது.

படிஸ்டாவின் கூற்றுப்படி, 2022 ஒரு திருப்புமுனை யாக இருந்தது, அப்போது டாலர் மதிப்புக் குறைப்பு மற்றும் அமெரிக்காவுடன் இணைக்கப்பட்ட நிதி நிறு வனங்களிலிருந்து விலகுதல் ஏற்கனவே மெதுவாக ஆரம்பமாகியிருந்தது ஆனால் அது பின்னர் வேகம் எடுத்தது.

ரஷ்யா மற்றும் சீனா, ஈரான் போன்ற நாடுகள் ஏற்கனவே அமெரிக்காவின் தடைகள் அல்லது தடைகள் குறித்த அச்சங்களை அனுபவித்திருந்தன. ஆனால் ரஷ்யாவின் இருப்புக்களின் அளவு மற்றும் முடக்கப்பட்ட சொத்துக்கள் காரணமாக இது ஒரு திருப்புமுனையாக அமைந்தது. 2022 முதல், சீனா போன்ற முக்கிய மத்திய வங்கிகள், அமெரிக்க கருவூலங்களிலிருந்து விலகிச் செல்கின்றன என்று அவர் கூறினார்.

உலகளாவிய அந்நிய செலாவணி இருப்புக்களில் டாலரின் பங்கு கடந்த நான்கு ஆண்டுகளில் படிப் படியாகக் குறைந்துள்ளது. CIS மற்றும் BRICS நாடுகளுட னான வர்த்தகத்தில் ரஷ்யா அடிப்படையில் மேற்கத்திய நாணயங்களை நீக்கியுள்ளது, அவையும் தங்கள் மற்ற கூட்டாளிகளுடன் அவ்வாறே செய்து வருகின்றன. எதிர் காலத்தைப் பொறுத்தவரை, greenback ஒரு “முக்கியமான” உலகளாவிய நாணயமாக இருக்கும் அதே வேளையில், டாலரிலிருந்து விலகிச் செல்வது தொடரும் என்றும் அதன் “மேலாதிக்கத்தை” படிப்படியாக பலவீனப் படுத்தும் என்றும் பாடிஸ்டா கூறினார்.

## ஈரானை எப்படி ... தொடர்ச்சி...

செல்ல அனுமதிக்காது. தொடர்ந்து முயற்சி செய்வார்கள், பலவீனமான நிலைகளைத் தேடுவார்கள்.

ஈரானில் நடந்த போராட்டங்களின் போது ஆயுத ஊடுருவல் மற்றும் குழுக்களை ஒழுங்கமைப்பது நீண்ட காலமாக தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையை வெளிப் படுத்துகிறது. 12 நாள் போரில் ரேடார்கள் மற்றும் வான் பாதுகாப்புகளை முடக்குவதில் மொசாட்டின் பங்கு மிக முக்கியமானது, ஆனால் அது மட்டும் அல்ல. இஸ்ரேலியர் கள் ஈரானுக்குள் ட்ரோன் இயக்க தொழிற்சாலைகளைக் கொண்டிருந்தனர், இதன் விளைவாக ஏராளமான படைத் தளபதிகள் மற்றும் அரசாங்க படையினர் கொல்லப் பட்டனர். சில எதிர்ப்பாளர் குழுக்கள் எவ்வளவு எளிதாக ஆயுதம் ஏந்தி ஒழுங்கமைக்கப்பட்டன என்பதைக் கருதும் போது, வெளிநாட்டு உளவுத்துறை சேவைகள் ஈரானில் தீவிரமாக செயல்படுகின்றன என்பது தெளிவானது.

இது ஈரானின் வான் பாதுகாப்புக்கு ஒரு பிரச்சனை: ட்ரோன்கள் அல்லது சிறிய ஏவுகணைகள் மூலம், எந்தவொரு பாதுகாப்பு அமைப்பு அல்லது ரேடாரையும் பல நூறு கிலோமீட்டர் தொலைவில் இருந்து தாக்க முடியும். இது ஜூன் மாதத்தில் நடந்திருந்தது. வான் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் ரேடார்களைச் சுற்றி வலுவான சுற்றளவு பாதுகாப்பின் தேவை பற்றி தற்பொது ஈரான் எச்சரிக்கையாக இருக்கின்றது.

எனவே தான் இந்த கலவரங்களைத் தொடர்ந்து, ஈரானிய பாதுகாப்புப் படைகள் நாடு தழுவிய விரிவான தேடுதலைத் தொடங்கியுள்ளன. மொசாட் தொடர்பான முகவர்களைத் தேடும் பணியை ஈரானிய எதிர் உளவுத்துறை நாடு தழுவிய அளவில் தொடங்கியுள்ளது. ஈரானின் தற் போதைய முதன்மையான பணி அதுவாக தான் உள்ளது. ஏனெனில் ஈரானை உள்ளிருந்து மட்டுமே வீழ்த்த முடியும்.

• • •

## போர்க்குற்ற விவகாரம் ... தொடர்ச்சி...

அதுமாத்திரமன்றி இம்மீறல்கள் தகவல்களைத் திரட்டுவதற்கும், மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கும, தனிநபர்கள் மற்றும் சமூகங்களை ஒடுக்குவதற்கும், பரவலான அச்ச மற்றும் அவமான உணர்வை வேரூன்றச் செய்வதற்குமான ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டதாக வும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## டிரம்ப் கிரீன்லாந்து ... தொடர்ச்சி...

முற்றிலும் இணைப்பதில் மட்டுமே ஆர்வம் காட்டுவதாகக் கூறிய போதிலும், சில நிபந்தனைகளின் கீழ் இந்த மாற்று சாத்தியமாகலாம்.

வெனிசுலாவுடனான சூழ்நிலையை டிரம்ப் எவ்வாறு கையாண்டார் என்பதைக் கவனியுங்கள்: 'இரண்டாம் கட்ட' மோதலுக்கான தயார்நிலையை வெளிப் படுத்திய பிறகு, டிரம்ப் விரைவாக பின்வாங்கி, அமெரிக்காவின் பொருளாதார நலன்களைப் பராமரிக்க முடியும் என்பதையும், ஆட்சி அமெரிக்க சார்பு மற்றும் சீன எதிர்ப்புக் கொள்கைகளுடன் தன்னை இணைத்துக் கொள்ளும் என்பதையும் உணர்ந்தவுடன், தற்போதைய வெனிசுலா ஜனாதிபதி டெல்சி ரோட்ரிகஸுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார். கிரீன்லாந்துடனும் இதேபோன்ற சூழ்நிலை உருவாகலாம்.

ஐரோப்பியத் தலைவர்கள் அமெரிக்காவிற்குள் செல்வாக்கு மிக்க கூட்டாளிகளைக் கண்டறிந்து, அமெரிக்க நிர்வாகத்தின் வளங்கள் மற்ற நெருக்கடிகளுக்கு அவர்களைத் திருப்பிவிடப்பட்டால் இது நிகழலாம். எனினும் தற்காலிகமாக பின்வாங்கும் டிரம்பின் திறனைக் குறைத்து மதிப்பிடக்கூடாது, சூழ்நிலைகள் மிகவும் சாதகமாக இருக்கும்போது மட்டுமே பிரச்சினையை மீண்டும் பரிசீலிக்க வேண்டும்.

**நன்றி: ரஸ்யா ருடே**

## பாதிக்கப்பட்ட ... தொடர்ச்சி...

பயனாளிகளிடம் கையளிப்பது தொடர்பான நடைமுறைகளைத் துரிதப்படுத்த அதிகாரிகளுக்கு விசேட உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு ஜனாதிபதி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதியை வரவேற்றுள்ள அந்த இயக்கம், நிலமற்ற மலையக மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில் இக்கோரிக்கையை ஒரு "பொங்கல் பரிசாக" நிறைவேற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

## மலையகப் பகுதி ... தொடர்ச்சி...

வெடிக்கும் எனவே தீர்வு தருவோம் அல்லது தரமாட்டோம் என்ற பதிலையாவது பெற்றுத்தாருங்கள் என்றார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அப்பாவி விவசாயிகளை கடந்த பல மாத காலமாக ஏமாற்றியுள்ளதை முத்து நகர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் இருந்து தெரியவருகிறது. இவர்கள் ஆட்சிக்கு வரும் முன்னர் ஒரு கதையையும் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் முன்னுக்கு பின் முரணான கருத்துக்களையும் கூறிவருகின்றனர்.

குறித்த விவசாயிகள் நெற்செய்கை விவசாயத்தை நம்பியே வாழ்வாதாரமாக கொண்ட நிலையில் தற்போது பல கஷ்டங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அதிகளவாக விவசாயம், மீன்பிடியை வாழ்வாதாரமாக கொண்டவர்களாக காணப்படுகிறார்கள். விவசாயத்தை தவிர வேறு தொழில்கள் தங்களுக்கு தெரியாது எனவும் இப்போது ஒரு நேர சாப்பாட்டுக்கு கூட கையேந்த வேண்டிய நிலையும் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே முத்து நகர் விவசாயிகளுக்கான தீர்வை ஆட்சியில் உள்ள அரசாங்கம் மூலமாக விரைவான தீர்வை வழங்க வேண்டும் என்பதை விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

## 16 ஆம் திகதி... தொடர்ச்சி...

இடம்பெயர்ந்த 800 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக 20 இலட்சம் ரூபா வழங்கும் வேலைத்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ், தலா 300,000 ரூபாவுக்கான காசோலைகள் வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் வைத்தியர் சுசில் ரணசிங்க, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன்போது வழங்கிவைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த்தேசிய கட்சிகளின்... தொடர்ச்சி...

எதிர்ப்பே தமிழ்த்தேசிகூட்டமைப்புக்கு ஏற்பட்டது.

எதிர்வரும் கிழக்கு மாகாணசபை தேர்தலிலும் அறுதிப்பெரும்பான்மையை எந்த ஒரு தமிழ்த் தேசியக் கட்சிகளும் பெறமுடியாது, ஆனால் முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக கிழக்கில் மாகாணசபை தேர்தலை சந்திக்கும் பேச்சு வார்த்தைகளை முஸ்லிம் உலாமா சபைகளும், பள்ளிவாசல் சமூகமும், அரசியல் கட்சிகளும் சேர்ந்து இப்போதே மேற்கொண்டு வருகின்றனர். இதுவும் தமிழ்தேசிய கட்சிகளுக்கு பாடமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

• • •

## மலையகக் கல்விப் ... தொடர்ச்சி...

வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேசிய மட்டத்தில் உருவாக்கப்படும் கல்விக் கொள்கையில் மலையகப் பகுதிகளுக்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகிறது. எனவே, புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களின் போது கற்றல் உபகரணங்களைப் பாதுகாப்பது மற்றும் அனர்த்தங்களுக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய பாடசாலைக் கட்டடங்களை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அத்துடன் மலையகப் பாடசாலைகளுக்குத் தகுதியான ஆசிரியர்களை நியமிப்பதற்கும், அவர்கள் அங்கேயே தங்கிப் பணியாற்றுவதற்கும் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

மலையக மாணவர்களின் கல்வி இடைவிலகல் என்பது ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகும். பொருளாதார நெருக்கடி, டிட்வா புயல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் இப்பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியுள் ளன.

இருப்பினும், அரசாங்கத்தின் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் உரிய திருத்தங்களுடன் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டால், கல்வி முறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும். டிஜிட்டல் தொழில்நுட்பம், தொழில்சார் கல்வி மற்றும் சமமான வளப்பகிர்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட புதிய கொள்கைகள் மலையகப் பிள்ளைகளின் கைகளுக்கு கல்வி மீதான ஆர்வத்தை கொண்டு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. ஒரு சமூகத்தின் முன்னேற்றம் அதன் பிள்ளைகளின் கல்வியிலேயே தங்கியுள்ளது என்பதை உணர்ந்து, மலையகக் கல்வியை மீளக்கட்டியெழுப்புவது ஒட்டுமொத்த தேசத்தினதும் பொறுப்பாகும்.

• • •

## அதிக முஸ்லீம் மாணவர் ... தொடர்ச்சி...

NEET தேர்வை எழுதுகிறார்கள், தோராயமாக 120,000 MBBS இடங்களில் ஒன்றைப் பெற வேண்டும்.

நவம்பரில் கல்லூரியின் தொடக்கப் பாடத்தின் மத அமைப்பு பற்றி உள்ளூர் இந்து குழுக்கள் அறிந்தவுடன், முஸ்லிம் மாணவர் சேர்க்கையை ரத்து செய்யக் கோரி ஆர்ப்பாட்டங்களைத் தொடங்கினர். காஷ்மீரில் உள்ள ஒரு முக்கிய வைஷ்ணோ தேவி கோவிலில் பக்தர்களின் காணிக்கைகளிலிருந்து கல்லூரி முக்கியமாக நிதியளிக்கப்பட்டதால், முஸ்லிம் மாணவர்களுக்கு "அங்கு இருக்க எந்தத் தேவையும் இல்லை" என்று அவர்கள் வாதிட்டனர். இந்தப் போராட்டம் வாரக்கணக்கில் தொடர்ந்தது, ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்லூரியின் இரும்பு வாயில்களுக்கு வெளியே ஒவ்வொரு நாளும் கூடி முழக்கங்களை எழுப்பினர்.

இதற்கிடையில், பிரதமர் நரேந்திர மோடியின் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் காஷ்மீரின் லெப்டினன்ட் கவர்னருக்கு மனுக்கள் எழுதி, இந்து மாணவர்களுக்கு மட்டுமே சேர்க்கையை ஒதுக்குமாறு வலியுறுத்தினர். அடுத்த நாட்களில், அவர்களின் கோரிக்கைகள் கல்லூரியை மூடக் கோரும் அளவுக்கு அதிகரித்தன.

போராட்டங்கள் தீவிரமடைந்ததால், மருத்துவக் கல்விக்காக அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட "குறைந்தபட்ச தரநிலைத் தேவைகளை" பூர்த்தி செய்யத் தவறியதால், ஜனவரி 6 அன்று தேசிய மருத்துவ ஆணையம் கல்லூரியின் அங்கீகாரத்தை ரத்து செய்ததாக அறிவித்தது. ஆனால் பெரும்பாலான மாணவர்கள், கல்லூரியில் எந்த குறைபாடுகளையும் காணவில்லை என்று கூறினர்.

## திருக்கோணேஸ்வரத்தில் ... தொடர்ச்சி...

அடையாளத்தின் சின்னம். முதலில் ஆலய நிர்வாகம் வெளிப்படைத்தன்மையுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும். அரசியல் தலையீடுகளை விலக்கி, சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் இணைக்கும் நிர்வாக அமைப்புஉருவாக வேண்டும். கன்னியா வெந்நீரூற்றைப் போல, திருக்கோணேஸ்வரமும் கைப்பற்றப்படும் நிலைக்குதள்ளப்படக்கூடாது. இதனைத் தடுக்க, ஈழத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சிந்தித்து செயற்பட வேண்டியகட்டாயம் உள்ளது.







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்



